ஆரம்பம் 1969 பெப்ரவரி

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

அறிவோம்.. அறிவிப்போம்...

சமய – சமூக – இலக்கிய வெளியீடு




மே–ஜுன்–ஜுலை – 2022

"உன்னால் நன்மை செய்யக் கூடுமாயின்,
தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச்
செய்ய மறுக்காதே."

– நீதிமொழிகள் 3:27

50/=

# தொண்டன்

அறிவோம் ... அறிவிப்போம் ...

ஆரம்பம் - 1969 பெப்ரவரி

மலர் - 53 இதழ் - 05

மே-ஜூன்-ஜூலை - 2022

ஆசிரியர் :

■ அருட்தந்தை. நிகஸ்டன் பீற்றஸ்

துணையாசிரியர் :

■ பெஸ்லியோ வாஸ்

நூல் வடிவமைப்பு :

■ சுபாஜெனி சங்கர்

வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


| | |
|---|---|
| இயேசுவின் திரு உடல் திரு இரத்தம் | 02 |
| மாணவர் பக்கம் | 05 |
| முதற் புனிதர் தேவசகாயம்பிள்ளை | 06 |
| கதிரைகள் | 07 |
| கடுகுக் கதை | 08 |
| என் தேசமே | 09 |
| ஒரு வெண்மணற் கிராமம் | 10 |
| பார்வைகள் பலவிதம் | 13 |
| அறிவார்ந்த முயற்சியே வெற்றி | 14 |
| சோதனை | 16 |
| நவீன சமூகச் சிக்கல் | 18 |
| பெந்தகோஸ்தே | 19 |
| கூட்டொருங்கியக்கத் திருஅவை | 20 |
| போராட்ட வாழ்வை பூந்தோட்டமாக்க | 22 |
| இறைவா இன்னமும் | 24 |
| திருஅவைச் செய்திகள் | 25 |
| வினாவிடைப் போட்டி | 26 |
| திருவிவிலியம் கற்போம் | 27 |
| போட்டி முடிவுகள் | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com


விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 960/=

(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு ...

## தலைவர்களின் அலட்சியமும் மக்களின் அவலநிலையும்

எமது நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் மோசமான நிலையை அடைந்து கொண்டிருக்கின்றது. Gas இல்லை, பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, மண்ணெண்ணெய் இல்லை. இவை இல்லாத நிலை ஏனைய பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலும் தாமதங்களை ஏற்படுத்துகின்றது. இல்லாத எரிபொருளுக்கு ஏற்றப்படும் விலையுயர்வையும், கிடைக்காத எரிபொருளுக்கு நிற்கும் மக்களின் தூர வரிசையையும் காணும்போது காண்பவர்களின் உள்ளங்கள் பதறுகின்றது. இதனால் சாதாரண மக்களுக்கு இன்னுமின்னும் கோபமும் எரிச்சலும் தான் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது.

ஒரு குடும்பத்தின் ஆட்சி எமது நாட்டை சீர்குலைத்துவிட்டது என்ற பேச்சு உள் நாட்டிலும், வெளிநாடுக ளிலும் பேசு பொருளாகவே இருக்கின்றது. இலங்கை மிகவும் அழகான நாடு. அனைத்து வளமுமிக்க இத்தீவைப் போன்று வேறு தீவுகள் இல்லை. இவ்வழகிய தீவை ஒரு கும்பல் சூறையாடியும் அலட்சியத்துடனும் புரிந்த ஆட்சி மக்களை இன்று நடு வீதியில் நடுவெயிலில் நிறுத்தி இருப்பதைக் காண்கின்றபோது கவலையளிக்கின்றது. நாளுக்கு நாள் ஏற்றப்படும் விலையும், அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடும் பிள்ளைகளின் கல்வி யையும், குடும்பங்களின் பொருளாதாரத்தையும், சமூகத்தின் அமைதியையும், நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை யையும் பாதித்த வண்ணமே இருக்கின்றது. இந்த நிலை எப்போது மாறும் என்ற கேள்வியும் எண்ணமும் எழாமல் இல்லை.

இப்படியான இக்கட்டான ஒரு சூழ்நிலைக்குள்ளும், அவலநிலைக்குள்ளும் மக்கள் தவிக்கின்றபோது இருக்கின்றவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து புண்ணியத்தைத் தேடவேண்டிய நிலையில், குறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பதும், இல்லாதவர்கள் இருப்பது எல்லாவற்றையும் கொடுத்து வாங்குவதும் கவலையளிக்கின்றது. எம் நாட்டு வளங்களையும், பணத்தையும் அந்நிய செலாவணியையும் சுரண்டி யதால்தான் எமக்கு இப்போது இந்நிலை. இது கண்டும் இன்னுமின்னும் சுரண்டி சொத்து சேர்க்க நினைப்பது தெய்வ குற்றமென்பதை நாம் மறக்கக் கூடாது. "உன்னால் நன்மை செய்யக் கூடுமாயின், தேவைப்படுபவர்க்கு அந்த நன்மையைச் செய்ய மறுக்காதே" (நீதிமொழிகள் 3:27).

ஏழையிடத்திலே சுரண்டி வாழும் மனிதர்களை இறைவன் மன்னிப்பது கடினம். எத்தீங்கையும் மன்னிக்கும் இறைவன் ஏழைகளை சுரண்டி வாழ்ந்தாலோ அல்லது அவர்களை கவனியாது விட்டாலோ எம்மீது இரக்கம் காட்டமாட்டார் என்பதை செல்வரும், ஏழை இலாசரும் உவமையிலே கற்றுக்கொள்கின்றோம் (லூக்கா 16:19 – 31).

நாம் எல்லோரும் ஒரே மாதிரியான பிரச்சினையைத்தான் தற்காலத்திலே சந்தித்துக்கொண்டு இருக்கின்றோம். எல்லோரும் ஒன்றுசேர்ந்துதான் இப்பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டும். யாரோ செய்த தவறால் எமக்கு இந்நிலை என்றால் நாமும் இதே தவறை செய்யலாமா....??

சந்தர்ப்பம் பார்த்து சுரண்டிப் பிழைக்க நினைப்பவர்கள் மனதை மாற்றிக்கொண்டால் நல்லது. அல்லாது போனால் வாழ்க்கை ஒரு வட்டம் என்று கற்றுத்தரும் இப்பூலோகத்திலே இதே சூழ்நிலையை அல்லது இதைவிட மோசமான சூழ்நிலையை நாம் எமது வாழ்விலும் நிட்சயம் சந்தித்தே ஆக வேண்டும் என்பதை மறக்காமல் இருத்தல் நல்லது.

– அதிபர் –

# இயேசுவின்

## திரு உடல் – திரு இரத்தப் பெருவிழா





- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

### பலியும் பகிர்வும்

புனித அன்னை தெரேசா கூறுகின்றார்: “நற்கருணையில் நாம் காணும் இயேசுவைத்தான் இந்த ஏழை மக்களிலும் காண்கிறேன்”. நற்கருணைப் பெருவிழா நமக்கு பல அடிப்படை உண்மைகளை வெளிப்படுத்துகின்றது.

### மெல்கிசெதேக் - அரசர் - குரு

மெல்கிசெதேக்கைப் பற்றிய குறிப்பு தொடக்கநூலின் ஆரம்பத்தில் தரப்படுகிறது.

அவர் அரசராகவும் குருவாகவும் இருக்கின்றார்.

அவர் சாலேமில் (தற்போதைய எருசலேமில்) பணி புரிகின்றார்.

அவர் அப்பமும் இரசமும் ஒப்புக்கொடுக்கின்றார்.

அவர் படைப்பின் இறைவனுக்கு அவற்றை ஒப்புக்கொடுக்கின்றார்.

இன்னும் ஆபிரகாமின் தனிக்கடவுள் அல்ல.

ஆபிரகாமை அவரது எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டல் செபம் கூறுகிறார்.

ஆபிரகாம் அவருக்கு தன் சொத்தில் பத்திலொரு பங்கை காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறார்.

ஒன்று கவனத்தில் கொள்ள வேண்டும். மெல்கிசெதேக் ஒரு புறசமயக் குரு. புற சமய கடவுளுக்கு பலி ஒப்புக்கொடுக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் பாலைவனத்தில் இறைவன் மன்னாவைப் பொழிந்து மக்களின்

பசியைப் போக்கினார். அதேபோன்று பாறையி லிருந்து தண்ணீரைத் தந்து அவர்களது தாகம் போக்கினார்.

இயேசு இம்மண்ணில் வாழ்ந்தபோது பாலை வனத்தில் பசியாய் இருந்த 5000 பேருக்கு 5 அப்பங்களை பலுகிப் பெருக்கினார் அவர்களது பசியைப் போக்கினார்.

இறுதி இரவுணவில் தம் சீடரோடு உணவ ருந்துகையில் அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து தனது உடலாகவும் இரத்தமாகவும் கையளித்து இரு முக்கிய அம்சங்களை முன்வைக் கின்றார். அப்பத்தை உண்பது இயேசுவின் வாழ்வில் பங்கு கொள்வதையும், இரத்தத்தில் பங்கு கொள்வது அவரது இறப்பில் பங்கு கொள்வதையும் குறிக்கி றது. இறப்பு என்றால் அவரது இறப்பு - உயிர்ப்பை ஒட்டு மொத்தமாகக் குறிக்கிறது.

ஆயிரமாண்டுகளுக்குப் பின்னர் நாம் தற்போதைய நற்கருணைக் கொண்டாட்டத்தில் மேற்கூறப்பட்டவற்றையெல்லாம் பயன்படுத்து கின்றோம். குரு கடவுளால் அழைக்கப்படுகிறார். மாறாக, லேவியக் குருத்துவத்தில் உள்ளது போன்று மக்களால் தெரிவுசெய்யப்பட்டவரல்ல. பீடம் விண்ணக எருசலேமில் உள்ள உணவு மேசையல்ல. நாம் அனைவரும் எமது திரு முழுக்கு மூலம் அவரது குருத்துவத்தில் பங்கு பற்றுகின்றோம். நற்கருணை விருந்தில் தலைமை தாங்குபவர் அப்பத்தையும் இரசத்தை யும் ஒப்புக்கொடுத்து எமக்காக வேண்டுதல்கள் பண்ணி நன்றி கூறி முடிக்கின்றார். யூதர்களின் கருத்துப்படி இரத்தம் உயிரைக் குறிக்கின்றது. எனவே உயிர்தரும் இரத்தம் கடவுளுக்கு மட்டுந்தான் சொந்தம். கடவுளுக்குச் சொந்த மானதை இயேசு எல்லோருக்கும் எல்லாக் காலத்தவருக்கும் பகிர்ந்தளிக்கின்றார்.

ஆதியில் ஆதாமின் உறவு பசுமையாக இருந்தது. அது பாதியிலே பாழாய்ப் போனது. இருப்பினும் படைத்தவரை, காத்தவரை, வழி நடத்தியவரை, விடுதலை அளித்தவரை ஏனோ அவர்கள் மறந்துவிட்டார்கள். இருப்பினும் இறைவன் சோர்ந்து போகவில்லை; அவர்களைக் கைவிடவும் இல்லை. மாறாக அவர்களின் பசியையும் தாகத்தையும் தணித்தார். இறுதியில் உறவின் உச்சக் கட்டமாக தனது ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்.

உறவின் உச்சக்கட்ட இறுதிக்கட்ட வெளிப் பாடே இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் நமக்குக் கொடுத்தது. இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோதே பாவிகளோடும், உள்ளம் உடைந்தவர்களோடும், முடவர்களோடும், செவிடர் களோடும், குருடர்களோடும் ஓடிச்சென்று, உறவு களைப் புதுப்பித்துக்கொண்டார். அவரின் உறவு நிலைத்திருக்கக்கூடியது; நிரந்தரமானது; நிதமும் சுவைக் கக்கூடியது. “இதோ உலகம் முடியும்வரை உங்க ளோடு நான் இருக்கிறேன்” (மத் 20:28) என்றார். என்றென்றும் அவர் இருக்கப்போவதை நினைவுபடுத்துகின்றார்.

“நானே நல்ல ஆயன்”. ஆயன் தன் ஆடு களுக்காக தன் உயிரையே வழங்கக் காத்தி ருப்பவன். அதனால்தான் இயேசு கூறினார், “நான் ஆடுகள் வாழ்வு பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். எனது சதையை உண்டு என் இரத்தத்தைப் பருகுபவன் நிலைவாழ்வைக் கொண்டுள்ளான்”. நிலைவாழ்வு என்பது அழியாத வாழ்வு. அவரது இறப்பிலும் உயிர்ப்பிலும் தொடரும் வாழ்வு.

## அன்பின் வெளிப்பாடு

வேறொரு விதத்தில் நோக்கினால் கடவுளுக் கும் இஸ்ராயேல் மக்களுக்கும் நிலவிய உடன்படிக்கை அன்பின் வெளிப்பாடாகும். இஸ்ராயேல் மக்கள் கடவுளோடு செய்த உடன்படிக்கையை முறித்தனர். அதுவே அவர் கள் செய்த பெரிய பாவமாகும். இருப்பினும் அவர்களைத் தண்டிக்காது இறைவாக்கினர் எரேமியா வழியாக புதியதோர் உடன்படிக்கையை முன்னறிவித்தார். கடவுள் அறிவித்த இப்புதிய உடன்படிக்கையின் இணைப்பாளர் கிறிஸ்துவே. தமது சொந்த இரத்தத்தினால் புதிய உடன்படிக் கையைச் செய்தார் (எபி 9:11-15).

கடவுள் மனிதன் மீது கொண்ட அன்பையும் கடந்து மனிதனுக்காக மனுவுருவெடுத்தார். வார்த்தை மனுவுருவாகி நம்மிடையே குடி கொண்டார் (யோவா 1:14). அதையும் தாண்டி மனிதனுக்காக இறந்து உயிர்த்தது அன்பின் மாபெரும் வெளிப்பாடே. மனிதன் செய்யும்

தியாகங்களையெல்லாம் கடந்து தியாகத்தின் உச்சக்கட்டமாக, இயேசு தனது விலைமதிப்பற்ற உடலையும் இரத்தத்தையும் நமக்காகத் தந்தார்.

எனவேதான் நற்கருணை இன்று எமது கருப்பொருளாகின்றது. நற்கருணை தியாகத் தையும், பகிர்வையும் வெளிப்படுத்துகின்றது. இயேசு தனது கல்வாரிப் பலியின் முன் அடை யாளமாக அப்ப இரசத்தை எடுத்து தனது தசையாகவும் இரத்தமாகவும் ஒப்பிடுகிறார். அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கின்றோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில்தான் பங்குகொள்கிறோம். நற்கருணைக் கொண்டாட் டத்தில் கிறிஸ்துவின் இறப்பும் உயிர்ப்பும் நினைவுகூரப்படுகின்றது. உலக மக்கள் அனைவ ரும் மீட்படைய அவர் சிலுவைப் பலியை ஏற்றார் அவரது தியாகப் பலியை எமக்காகப் பகிர்ந்து கொண்டார்.

## ஓர் உடல்

பவுல் அடிகளார் நற்கருணையின் மகத்து வத்தை வேறொரு கோணத்தில் வெளிப்படுத்து கின்றார். அப்பம் ஒன்றே. ஆதலால் நாம் பலராயினும் ஒரே உடலாய் இருக்கிறோம். ஏனெனில் நாம் அனைவரும் அந்த ஒரே அப்பத்தில் தான் பங்குகொள்கிறோம். நற்கருணைக் கொண் டாட்டத்தில் கிறிஸ்துவின் இறப்பும், உயிர்ப்பும் நினைவுகூரப்படுகின்றது. சிதைந்த இயேசுவின் உடலை உண்ணும் போதும் சிந்திய இயேசுவின் இரத்தத்தைப் பருகும்போதும் நாம் கிறிஸ்துவில் ஒன்றிணைகிறோம். இந்த உண்மையை உணர்ந்த பவுலடியார் - பிளவுகள் பிரிவினைகள் இன்றி தகுதியோடு கிறிஸ்துவின் திருவிருந்தில் பங்கெ டுக்க அழைப்பு விடுக்கின்றார்.

## பகிர்வு வாழ்வு

சமுதாயத்தில் வாழும் நாம் பல விடயங்க ளுக்கு சமுதாயத்தை நம்பியிருக்கிறோம். சீப்பு முதல் சோப்புவரை நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளும் யாரோ செய்ததுதான். சமுதாயத்திலிருந்து இவைகளையெல்லாம் பெற்றுக்கொள்ளும் நாம், சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும் என்ன பங்களிப்பு செய்கிறோம் என்ற வினாவுக்கு பதில் தேடுவோம். அதற்கு நற்கருணை மூலம் பதில் தருகின்றார் இயேசு. அந்தப் பதில் பகிர்தலாகவே இருக்கும். இயேசு தம்மைத் தியாகம் செய்து பகிர்தலுக்கு அழைப்பு விடுக்கின்றார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அடுத்தவர்களின் தேவை களை நிறைவுசெய்ய முன்வருவோம். தியாகம் நிறைந்த உள்ளத்தை நமதாக்கி, அதன் விளைவான பகிர்தலை முன்னெடுப்போம். பகிர்தல் என்பது விதைநெல்மாதிரி. அதை எந்த அளவுக்கு பரவலாக விதைக்கிறோமோ, அந்த அளவுக்குப் பலுகிப் பெருகும்.

## நிலை வாழ்வில் பங்கு

நற்கருணையின் மகத்துவம் பற்றி இயேசு கூறியுள்ளார்:

"நானே வானினின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு. என்னை உண்பவன் என்றுமே வாழ்வான்". வேறொரு விதத்தில் கூறினால் நிலைவாழ்வைக் கொண்டுள்ளான். நிலைவாழ்வு என்பது உயிர்த்த வாழ்வு. இயேசு தம் இறப்பினால் சாவை வென்றார். அவரது உயிர்ப்பில் எம்மையும் இணைத்துக்கொண்டார். இவ்விதமாக அவரை உண்பதால் நாம் அவரது இறப்பிலும் உயிர்ப்பிலும் பங்குகொள்கிறோம். நாம் இறந்தாலும் அவரோடு உயிர்த்தெழுவோம். எமக்கும் உயிர்த்த வாழ்வில் பங்குண்டு என்ற நம்பிக்கை திடமாக உள்ளது.



கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுவரும் இலங்கை நாட்டிற்கு, மருந்துகளையும், மருத்துவக் கருவிகளையும் உலகளாவிய சமுதாயம் கொடுத்து உதவுமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் இரஞ்சித் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில், பொருளாதாரம் தவறாக கையாளப்பட்டுள்ள காரணத்தால் வெளிநாட்டுப் பணம் பற்றாக்குறை ஏற்பட்டதைத் தொடர்ந்து, நாடு 1948ம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதற்குப் பின்னர் கடும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது.



# கிறிஸ்தவம்

க.பொ.த உயர்தரம்

# மாணவர் பக்கம்

மாதிரி வினாத்தாள் - பகுதி - 1

- நில்மினி கஜேந்திரன்

**தொடர்** XIII

**மாணவர் பக்கம்**

ஏப்ரல் 2022

விடைகள்

| | | |
|---|---|---|
| 1) 3 | 5) 4 | 9) 2 |
| 2) 1 | 6) 2 | 10) 1 |
| 3) 2 | 7) 1 | |
| 4) 2 | 8) 3 | |

**1. அரசர்கள் இறைவனுக்கெதிராய் எவ் அரசன் காலத்தில் செயற்பட்டனர்?**

1. ஏரோது 2. சாமுவேல் 3. தாவீது
4. சாலமோன் 5. சவுல்

**2. மெசியாவின் அரசு அமைதியின் அரசாகும் போது நிகழ்பவை:**

1. எல்லோரும் நற்செய்தி சொல்வர் 2. மகன் தந்தைக்கு எதிராவான்
3. திரைச்சீலை இரண்டாகக் கிழியும் 4. மக்கள் அனைவரும் இடம்பெயர்வர்
5. ஓநாய் செம்மறி ஆட்டுடன் வாழும்

**3. மீக்கா இறைவாக்கினர் (சாமு 17:12) குறிப்பிடும் எப்ராத்தா எனும் ஊருக்குச் சொந்தக்காரர் யார்?**

1. மோசே 2. தாவீது 3. கோலியாத்து 4. ஏரோது 5. சாலமோன்

**4. இறைவனின் ஆட்சியின் வல்லமையையும், மெசியாவின் ஆட்சியில் வருகையையும் கொண்டாடுவதற்காய் விடுக்கப் பட்ட அழைப்பு.**

1. விழிப்பாய் இருந்து ஜெபம் பண்ணுங்கள்"
2. "காலம் நிறைவேறிவிட்டது மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்"
3. "மகளே சீயோன் மகிழ்ந்து கழிகூறு"
4. "இவளும் ஆபிரகாமின் குமாரத்தியே" 5. "பாவிகள் மீட்படையவே நான் அனுப்பப்பட்டேன்"

**5. அமைதியின் காலத்தில் அரசர்கள் கழுதையின் மீது ஏறி வலம் வந்ததாகச் சொல்லப்படும் மரபு எது?**

1. யாவே 2. எலோகிம் 3. இணைச்சட்டம் 4. எபிரேய 5. யாவும் பிழை

**6. தென் அரசின் அரசன் உசியா இறந்த ஆண்டில் தனது பணியை யூதாவின் தலைநகரான எருசலேமில் ஆரம்பித்தவர்.**

1. அமோட்சியா 2. எசாயா 3. எசேக்கியேல் 4. மீக்கா 5. நெகேமியா

**7. இறைவாக்கினர் எசாயாவின் ஆட்சிக்காலத்தோடு தொடர்புடைய மன்னர்கள்.**

1. யோத்தாம், செக்கரியா, ஆகாஸ் 2. நாதாப், யோனா, ஆகாஸ்
3. மோவாபு, ஆகாஸ், நாதாப் 4. ஆமோஸ், ஆகாஸ், யோனா
5. பிலாத்து, ஏரோது, தாவீது

**8. இஸ்ரயேலில் அரசியல் குழப்பங்கள் நிறைந்த காலத்தில் பணியாற்றிய இறைவாக்கினர்.**


1. எசேக்கியேல் 2. எசாயா 3. யோவேல் 4. சாமுவேல் 5. நாதாப்பு

**9. பழைய ஏற்பாட்டில் தலைவர்களுக்கு இறை ஊக்கம் கொடுக்கப்பட்டதன் காரணம்.**

1. பயம் நீங்குவதற்கு 2. அவர்கள் பிரபல்யம் அடைய
3. இறைவாக்கு மற்றும் ஆட்சிப் பணிக்காக 4. அவர்களின் இயலாமையைப் புரிய வைக்க
5. கடவுளிடம் இருந்து அவர்கள் விலகி இருக்க

**10. எசாயாவின் முதல்பாடல் எவ்வாறழைக்கப்படுகிறது.**

1. நீதியின் பாடல் 2. அடிமையின் பாடல் 3. ஆளுமைப்பாடல்
4. ஏழைகளின் பாடல் 5. செம்மறியின் பாடல்




# தேவசகாயம் பிள்ளை

**மே** மாதம் 15ம் திகதி, ஞாயிற்றுக்கிழமை, அகில உலக திருஅவைக்கு, அதிலும் குறிப்பாக, இந்திய திருஅவைக்கு, அதிலும் மிகச்சிறப்பாக, தமிழக திருஅவைக்கு முக்கியமான நாள். ஆம், இந்தியாவின் முதல் பொதுநிலை மறைசாட்சி, புனிதர், தேவசகாயம் அவர்களை திருஅவையில் புனிதராக அதிகாரப்பூர்வமாக அறிவித்த நாள்.

அருளாளர் லாசருஸ் எனப்படும் தேவசகாயம் அவர்கள், தென் இந்தியாவின் திருவிதாங்கூர் மன்னராட்சியின் போது 1712ம் ஆண்டில் பிறந்தவர். அவரது இந்துமதப் பெற்றோர்களாகிய வாசுதேவன் நம்பூதிரி, தேவிகா அம்மா தம்பதியர், அவருக்கு நீலகண்டன் என்ற பெயரைச் சூட்டினர். இவர் அரண்மனையில் கருவூலத்திற்குப் பொறுப்பாளராகப் பணியாற்றினார். தனது 33வது வயதில் கிறிஸ்தவத்திற்கு மதம் மாறிய இவர், திருமுழுக்கில் தேவசகாயம் என்ற பெயரை ஏற்றார். இப்பெயர் லாசர் என்ற விவிலியப் பெயரோடு ஒத்துச்செல்வதாகும். இவரது மதமாற்றம் அரசத் துரோகம் மற்றும், அரசின் நிலையான தன்மைக்கு ஆபத்து எனக் கருதப்பட்டது. தேவசகாயம் அவர்கள் தவறாமல் அருளடையாளங்களைப் பெற்றார், பிற்படுத்தப்பட்ட சாதியினரோடு உணவருந்தினார், மிகவும் தாழ்மைப் பண்பைக் கடைப்பிடித்தார். நற்செய்தியை அறிவித்தார். மூடநம்பிக்கைகள், மற்றும், அநீதிக்கு எதிராகக் குரல்கொடுத்தார். இவர் மீது சுமத்தப்பட்ட தவறான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து, 1749ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23ம் தேதி அரசர் இவரைக் கைதுசெய்ய ஆணையிட்டார். அவர் சிறையில் அடைக்கப்பட்டு மரண தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டார். கரங்கள் கட்டப்பட்டு எருமை மீது பின்புறமாக அமர்த்தப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். பொதுவில் இரக்கமின்றி முள்சாட்டையால் அடிக்கப்பட்டார். அவரது காயங்களில் மிளகாய்ப் பொடி தூவப்பட்டது. எல்லாத் துன்பங்களையும் பொறுமையோடும் மனமகிழ்வோடும் ஏற்றார் மறைசாட்சி தேவசகாயம். பல்வேறு கிராமங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இவர், உட்காரவோ படுக்கவோ முடியாதபடி, ஏழு மாதங்கள் ஒரு மரத்தில் சங்கிலிகளால் கட்டி வைக்கப்பட்டார். 1752ம் ஆண்டு சனவரி 14ம் திகதியன்று நள்ளிரவில் படைவீரர்கள் அவரை எழுப்பி காற்றாடி மலைக்குக் கூட்டிச்சென்றனர்.



**டெனிஸ்டன்** - *சொறிக்கல்முனை*

# கதிரைகள்

மரத்தை கொன்று செய்யப்பட்ட
மகா சிம்மாசனங்கள்
கொலையின் பிரசவத்தில்
குடியுரிமை பெற்றுக் கொண்டவைகள்
அதிகார வர்க்கத்தின்
கருவறைகள்
கௌரவங்களை தூக்கி சுமக்கும் பல்லாக்குகள்

காலிரண்டு கொண்ட கயவர்களோ
கடும் பணி புரியும் கனவான்களோ
களவாடும் கொள்ளையர்களோ
கறை படியாத நல்லவர்களோ
அமர்ந்து ஆளும் அரசாட்சி
அடிக்கடி அதில் மாளக்கூடுமோ மனட்சாட்சி

அமர துடிக்கையிலோர் போராட்டம்
அமர்ந்த பின்னரேோர் பொம்மலாட்டம்
அமருமிடம் பறி போனாலோர் வெறியாட்டம்
ஆசனமொன்றிற்கா இத்தனை சதிராட்டம்


நிலைமாறும் கதிரைகளில்
நிலையாமை குடியிருக்க
பந்த சொந்தமற்ற கதிரைகளை
சொத்தென கருதும் மானிடரோ
அமரத்துணிந்து அதிலும் படர வேர் விட்டு
நடக்கையில் எழுகையில்
இருமித் தும்முகையிலும்
கதிரைகள் கழன்று போகக்கூடாதென்று
பகல் கனவு காண்பதொன்றே வியப்பிது அன்றோ

கதிரைகள் நிலையற்றது மானிடா
பதவிகளுக்காய் பிறப்பெடுக்கும் கதிரைகள்
மனிதர்களுக்காய் பிரசவிக்கப்படுவதில்லை
நிதர்சனமும் சத்தியமுமான உண்மையிதை
உணர மறுத்து எனக்கானது கதிரை என வாதித்தோர்
இறப்பின் போது கொண்டு போயினரல்லவே

நிலையாத கதிரைகளில்
நிலைக்குமெண்ணம் கொண்ட மானிடா
கதிரைகள் புறந்தள்ளி வெளியேற்றுகையில்
கை தாங்குமுறவுகளினை
சம்பாதித்து கொள்
நிலத்தில் அமர்ந்திருக்க பழகுங்கள்
நிலத்திருப்பவன் வீழ்வது நிஜவாய்ப்பில் குறைந்ததே
இது புத்தன் சொன்னது

அவர் படைவீரர்கள் முன்னிலையில் தனது இறுதி செபத்தைச் சொன்னார். ஐந்து துப்பாக்கிக் குண்டுகளால் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார் மறைசாட்சி தேவசகாயம். இயேசு மரி என்ற இனிய பெயர்களை உச்சரித்து உயிர்துறந்தார். கொலைகாரர்கள், இவரது உடலை அடக்கம் செய்யாமல், காட்டில் வனவிலங்குகளுக்கு உணவாகப் போட்டார்கள். தேவசகாயம் அவர்களின் வீர மரணம் பற்றிய செய்தி மூன்று நாட்களுக்குப்பின் அப்பகுதியில் பரவத் தொடங்கியது. ஐந்து நாள்களுக்குப்பின் மக்கள் அவரது எஞ்சிய உடலைக் கண்டுபிடித்து, அவற்றை மிகப் புகழ்பெற்ற கோட்டாறு புனித பிரான்சிஸ் சவேரியார் பேராலயத்தின் பலி பீடத்திற்கு முன்பாக நல்லடக்கம் செய்தனர். அன்றிலிருந்து, தேவசகாயம் அவர்கள், திருமண மான முதல் பொதுநிலையினர் புனிதராகவும். மறைசாட்சியாகவும் கருதப்பட்டார். முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், 2012ம் ஆண்டு டிசம்பர் 2ம் தேதி அவரை அருளாளராக அறிவித்தார்.

F.B: Tamil Catholic Media



# வயோதிபர் இல்லம்

– ஶற்றி

**கடுகுக் கதை 120**

அன்ரன் வீட்டில் அவரது குடும்ப நண்பர் இஸ்மாயிலும் அவரது குடும்பத்தாரும் வருகை தந்திருந்தார்கள். அவர்கள் பலதையும் பத்தையும் பற்றி உரையாடிக்கொண்டிருந்தார்கள்; அப்போது இஸ்மாயிலின் மூத்தமகனைப் பற்றிப் பேச்சு வந்தது. அவர் பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலைவாய்ப்பிற்காக காத்திருக்கின்றார் என்று தெரியவந்தது.

"இன்னும் அஞ்சு வரிசத்திக்கு ஒரு வேலை வாய்ப்பும் இல்லையாம்...." என்றார் இஸ்மாயில்.

"பென்சன் வயதையும் அறுபத்தைந்தாக்கிப் போட்டாங்க .... இல்லாட்டி பென்சனாப் போறவங் கட இடத்திற்காக புது ஆக்களப் போடலாம் அல்லவா....?" என்று அன்ரனின் மனைவி சொன்னார்.

அன்ரனின் இளையமகன் தகப்பனாரை நோக்கி "அப்பா..... எத்தின வயதிக்கு மேல உள்ள ஆக்கள வயோதிபர் எண்டு சொல்றது....?" என்று கேட்டார்.

அதற்கு இஸ்மாயில் "அறுபது வயதிக்கு மேற்பட்ட ஆக்கள...." என்று பதிலிறுத்தார்.

"அப்படியெண்டா இப்ப அரசாங்க அலுவலகங் களில் வேலை செய்யிற கனபேர் வயோதிபர்கள் தானே....?" என்று அன்ரனின் மகன் இஸ்மாயிலிடம் கேட்டான்.

"ஓமோம் வாப்பா....!" என்று சொல்லிவிட்டு, "இக் காலப் புள்ளைங்க எப்படியெல்லாம் யோசிக்கி றாங்க..." என்று மனதில் நினைத்துக்கொண்டார்.



# தூய்மைமிகு மூவொரு இறைவன்:

## ஒன்றிப்பின் அடையாளம்

ஒருமுறை கிளைகிராமம் ஒன்றில் மூவொரு இறைவன் பெருவிழா திருப்பலியை நிறைவேற்றுவதற் காகப் பங்குத்தந்தை வயல்வழியே நடந்து போய்க் கொண்டிருந்தார். இதனை எப்படி மக்களுக்கு விளக்கிச் சொல்வது, அப்படியே விளக்கிச் சொன்னா லும் அதை எப்படி அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்றெல்லாம் சிந்தித்தவாறே சென்றுகொண்டிருந்தார். அப்போது மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த விவசாயி ஒருவர், "என்ன சாமி, தீவிரமா யோசித்துக் கொண்டே போறீங்க" என்று பங்குத் தந்தையைப் பார்த்துக் கேட்டார். "இன்று மூவொரு இறைவன் பெருவிழா, அதைப்பற்றி மக்களுக்கு எப்படி புரிய வைப்பதுன்னு தெரியல, அதான் சிந்திச்சுட்டே போறேன். மனசுலே ஒரே குழப்பமா இருக்கு" என்றார் பங்குத்தந்தை.

"இதுல என்ன சாமி குழப்பம்? இத பாருங்க, இந்த சிவப்புக் கலர் பசுமாடு, பச்சை கலர் புல்லைத் தின்னுட்டு வெள்ளை கலர் பாலைக் கொடுக்குது." அவ்வளவுதான். இதுல, சிவப்பு கலர் பசுமாடு தந்தை, பச்சை கலர் புல்லு இயேசு, வெள்ளை கலர் பாலு தூய ஆவி. பசுமாடு, புல்லு, பால் ஆகிய மூன்றுக்கும் எப்படி ஒன்றுக்கொன்று தொடர்பு இருக்கோ அதுமாதிரி இந்தத் தந்தை, மகன், தூய ஆவி மூன்று பேருமே ஒருவருக்கொருவர் தொடர்புடையவங்க என்று ரொம்ப சுலபமா சொல்லுங்க சாமி, மக்கள் புரிஞ்சுக்குவாங்க..." என்று அந்த மாடு மேய்ப்பவர் ஒரு போடு போட்டார். அவ்வளவுதான்... பங்கு சாமியார் அப்படியே பொறி கலங்கி போனார். பல நேரங்களில் பாமர மக்களிடம் இருக்கும் இறைஞானம் கூட படித்தவர்களிடம் இருப்பதில்லை என்பது எவ்வளவு உண்மை!

– திருஅவை

# என் தேசமே...



என் தேசமே ..... நீ புறப்படு ....!
எந்நாளுமே .... புது விடியலைத் தேடியே....

- தேனகத்து தேனீ –
**ஜரிட் தீலீபன்**

யுத்தங்கள் பார்த்த நாட்கள் ....
அனர்த்தங்கள் கண்ட கண்கள் ...
கடந்து போகட்டும் கனவாக ... யாவும்
கடந்து போகட்டும் கனவாக ...

வயலெங்கும் வண்ணக் கோலம்
வானமெங்கும் காக்கையின் ஜாலம்
வீசட்டுமே வசந்தத்தின் பொற்காலம்
வாழ்த்தட்டுமே வானம் என்றென்றும்
வாழ்க்கை என்னும் வரம்பில் நிற்கும் எங்கள் வாழ்வு என்று மாறும்
வயல்களின் செழிப்பில் தானே பசுமை புரட்சி வாழும் நாளும்
வாடிய பயிர்கள் எல்லாம் வாழ்வு கண்டு ஓங்கிட வேண்டும்
வாழ்வு தேடி ஓடிய உயிர்கள் வென்று களையாறிட வேண்டும்
– யுத்தங்கள் பார்த்த நாட்கள் ....

கடலெங்கும் (எம்) நெஞ்சம் போக
கரையெங்கும் தஞ்சம் (நாம்) வாழ
காடு மலைகள் சென்றோம் உயிர் வாழ இங்கு
கனவொன்று ஓய்ந்தது நிஜமாக
எங்கள் நாட்டின் வளங்கள் காத்தால் (பல) தலைமுறைகள் வாழும் வாழும்
ஏட்டி போட்டி உணர்வால் இங்கே அண்ணன் தம்பி பாசம் குலையும்
தீர்வு வேண்டி நின்றோம் இன்று வேண்டும் இங்கு விரைவாய் விருப்பாய்
தாகம் தீரும் தாய்மண் வாழும் (அன்று) தலைநிமிர்ந்தே (எம்) நாடும் உயரும்
– யுத்தங்கள் பார்த்த நாட்கள் ....



***ஆசிரியை:***
'நான் அழகாக இருக்கிறேன்'
இது எந்தக் காலம்?
***மாணவி:*** இறந்த காலம் டீச்சர்.

⚜

***மாணவன்:*** சேர்! விலைவாசி எல்லாம் ஏறிப் போச்சு. மார்க்கையும் கொஞ்சம் பார்த்துக் கூட்டிப் போடுங்க சேர்...

⚜

***ஆசிரியர்:*** இங்கிருந்து அதிக தூரத்தில் இருப்பது சந்திரனா, அமெரிக்காவா?
***மாணவன்:*** அமெரிக்காதான் சேர்.
***ஆசிரியர்:*** எப்பிடி சொல்றே...?
***மாணவன்:*** ஆமா சேர்... இங்கிருந்து சந்திரனைப் பார்க்க முடிகிறது. ஆனால் அமெரிக்காவைப் பார்க்க முடியவில்லையே...!





# ஒரு வெண்மணற் கிராமம்
## காத்துக்கொண்டிருக்கிறது






**அத்தியாயம் 7**

“அந்தா மாமி வாரா விடுங்க அத்தான்” என்றதும் தாமோதரம் தன் பிடியைச் சடாரென விட்டு விட்டு வாசற் பக்கமும் உட் பக்கமும் பார்த் தான். சௌந்தரம் கலகலவென நகைத்தாள். நகைத்துக் கொண்டே

“மாமி இங்கே இல்லை. நான் இந்தா. இதில் ஈச்சந்தீவுக்குப் போயிற்றுச் சுணங்காம வாறன் என்று சொல்லிற்று அவ வெளிய போயிற்றா. இப்ப வந்தாலும் வருவா” என்றாள் சௌந்தரம்.

“அப்பாவும் இல்லையா”?

“அவர் வழக்கம் போலக் காலையிலேயே போயிற்றார்.”

சனிக்கிழமை வந்தது. காத்திருந்தபடியே பாராளுமன்ற அங்கத்தவரும் வந்தார். தாமோதரத்தின் யோசனைப்படி அடக்கமான உபசாரம் அவருக்கு. சௌந்தரம் கட்டிக்கொடுத்த பூமாலையைத் தாமோதரம் அவருக்கு அணிவித்தான். அதனைத் தொடர்ந்து பல பூமாலைகள்.

ஊரவர்களின் தேவைகள் எழுதப்பட்ட மனுவை அவரிடம் கொடுத்து அதைச் சபைக்கு விளக்கியபோது ஊரவர் எல்லோருமே வியந்தார்கள். எவ்வளவு நறுக்காக விஷயத்தைச் சொல்லியி ருக்கிறான் என்று ஊரவர் எல்லோருமே பாராட்டி னார்கள். ஏற்கனவே தேர்தல் பிரச்சார நாட்களில் அவனைத் தெரிந்தாலும். இப்போது பாராளுமன்ற அங்கத்தவர் தாமோதரத்திடம் பல கேள்விகளைக் கேட்டு அவனைப் பற்றி நன்றாக அறிந்து கொண்டார். இந்தக் கிராமத்தின் முதலாவது டாக்டராக வரவேண்டும் என்று அவனுக்கு ஆசி வழங்கினார். கூட்டத்தை முடித்துக் கொண்டு மதிய உணவை உண்ணும்போது பிற்பகல் மூன்று மணியாகிவிட்டது. சாப்பிட்டு முடிந்ததுமே அவர் போய்விட்டார்.

எல்லாமே சுமுகமாக முடிந்திருந்தாலும் பரமனுக்கு மட்டும் மனக்குறை. அவனுக்கு எதற்கும், எல்லாவற்றிற்கும், ஒலிபெருக்கியும் பாட்டும் மேடைப் பேச்சும் வேண்டும்! அவைகளின்றிக் கூட்டம் முடிந்ததிற் குறைபட்டுக் கொண்டாலும் அவன் ஆனந்தமாகவேயிருந்தான்.

விருந்து நடந்த பாடசாலை மண்டபத்தை மீண்டும் ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு அந்த விருந்திற்காகச் சௌந்தரத்தின் வீட்டிலிருந்து எடுத்த சில பீங்கான்களையும், கிளாஸ்களையும் எடுத்துக்கொண்டு அங்கே சென்றபோது, மேற்கே பரந்துகிடக்கும் கரைச்சைகளுக்கு மேலாகத் தூரத்தே தலையை நிமிர்த்தித் கொண்டிருந்த கந்தளாய்க் குன்றுகளிடையே தகதகத்து செம்பந்தாய்ச் சூரியன் விழுந்து கொண்டிருந்தது. செக்கர்வானின் ஒளி அசையாது விறைத்து நிற்கும் தென்னோலைகளிலும், இலையசைக்காமல் ஸ்தம்பித்து நிற்கும் மரங்களிலும் படர்ந்து விகசித்தது.

தெருப்படலையைத் திறந்து கொண்டு தாமோதரம் நுழைந்தபோது மல்லிகைப் பந்தரின் கீழே சௌந்தரம் புன்னகை பூக்க நின்று கொண்டிருந்தாள். அந்திச் செவ்வானம் போல மின்னும் அவள் முகத்தில், நெற்றியிலிருந்த கருஞ்சாந்துப் பொட்டு அவள் முகத்திற்கு மேலும் அழகூட்டியது. நீண்ட பின்னல் முடிவடைந்தவிடத்திலே கட்டப் பட்டிருந்த சிவப்பு றிபன் வண்ணாத்திப் பூச்சியைப் போல மார்பில் மொய்த்துக்கிடக்க அவள் பந்தற் கப்பிற் சார்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

தான் கொண்டுவந்த பிரம்புக் கூடையை அவளிடம் கொடுத்து 'கூட்டத்திற்கு நீயும் வந்திருக் கலாமே' என்றான் தாமோதரம்.

"வாசிகசாலையிலே நடந்த கூட்டத்தை வேலிக்குள்ளால பாத்தன்"

".....மறைப்புக்காகக் கட்டின கிடுகு வேலிக் குள்ளாலதான் உலகத்தைப் பாக்குது நம்ம பெண்சமூகம். எப்பதான் இவர்கள் நேரடியாக உலகத்தைப் பார்க்கப் போகிறார்களோ. இந்த வேலியெல்லாம் எப்பதான் தொலையப்போகிறதோ?" என்று அலுத்துக்கொண்டான் தாமோதரம்.

"வளவுக்கு வேலியில்லாட்டிக் கட்டாக்காலி மாடு வந்து எல்லாத்தையுமே மேய்ஞ்டும்" என்றவள்,' "இருங்க அத்தான் தேத்தண்ணி கொண்டுவாறன்" என்று அடுக்களைப்பக்கமாக நடந்தாள்.

"வேண்டாம், வேண்டாம்" என்று அவளைத் தடுத்து நிறுத்திய தாமோதரம் "எம்பியையும் அனுப்பி எல்லாத்தையும் ஒழுங்கு பண்ணிவைச்சிட்டு இப்பதான் சாப்பிட்டிற்று வாரன். எனக்கு அலுப்பாய்க் கிடக்கு. நான் போய்ப்படுக்கப் போறன்" என்று விளக்கங் கொடுத்துவிட்டு அவள் பதிலை எதிர் பாராமலே வீட்டுக்குப் போனான் தாமோதரம்.

அவன் வீட்டு முற்றத்தில் மாமரத்தின் கீழே சாக்குக் கட்டில் விரித்தபடியேதான் கிடந்தது. அலுத்துக்களைத்து வந்த தாமோதரம் பொத்தென்று கட்டிலில் விழுந்து படுத்தான். சில வினாடிகளிற் தன்னை மறந்து நித்திரையாகிவிட்டான்.

"தம்பி தம்பி" என்று யாரோ உருட்டி உருட்டி எழுப்பியபோது தான் தாமோதரம் எழுந்து சோம்பல் முறித்துக் கொண்டு கண்களை விழித்துப் பார்த்தான் அவன் முன்னால் அண்ணன் நாகேந்திரன் நின்றான். வீட்டினுள்ளே விளக்கு எரிந்து கொண்டி ருந்தது,

"இப்பதானா அண்ணா வாறீங்க?"

"இல்ல, யாழ்ப்பாணத்திலிருந்து வந்த உன்னோட ஆறுதலாக் கதைக்க வேணும் என்று ஐஞ்சு மணிக்கு முதல் வந்திற்றன். ஆனா நீ நித்திரையாயிருந்தாய். வீட்ட போயிற்று இப்பதான் வாறன்"

"ஓமண்ணா, அலுப்பாயிருக்கெண்டு சரிஞ்ச னான் என்னையறியாமலே நித்திரை கொண்டிற்றன்"

"அதுக்கென்ன, உன்ர படிப்பெல்லாம் எப்படியிருக்கு?"

"நல்லாத்தான் அண்ணா படிக்கிறன். முதல் தடவையிலேயே நான் அட்வான்ஸ் லெவல் பாஸ் பண்ணி வாசிற்றிக்கும் போவன்"

"எப்ப சோதனை"

"ஆவணி மாசத்தில"

"அப்ப இந்த வருஷம் நீ தம்பலகாமத் திருவிழாவுக்கு வரமாட்டாய் போல"

"ஓமண்ணா. வரத்தான் மாட்டன். ஆனிக் கடைசியிலோ இல்லாட்டி இங்கிலீசுக்கு ஆடி பிறந்த பின்போதான் திருவிழா வரும். இந்த வருஷம் அதுக்கு எப்படி அண்ணா வாறது? ஏனண்ணா இந்த முறை ஏதும் விசேஷமோ?"

"என்ன விசேடம் நடக்கப் போகுது எண்டு இப்ப எப்படிச் சொல்ல முடியும். அளவெட்டியில் இருந்து திறமான நாதஸ்வரம் வருகுதாம். மட்ராஸ் ரேடியோவில எல்லாம் வாசிக்கிற கூட்டமாம்"

"பத்மநாதன் குழுதானே. நான் யாழ்ப்பாணத் தில பல இடங்களில கேட்டிருக்கன். அதுக்காகச் சோதனையை விட்டிற்று இங்கு வாறதா?"

"அதுக்கில்ல. என்ர தம்பி நல்லாப் படிச்சு டாக்டரா வரவேணும் எண்டு நேத்திக்கடன் வச்சி வருஷாவருஷம் நான் காவடி எடுக்கிறன். நான் மூத்தபிள்ளையாக இருந்தும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உதவாம அலக்கழிஞ்சு போனன். நீயெண்டான நல்லா வாறதுக்கு அந்தக் கோணேசர் தான் அனுக்கிரகம் பண்ண வேணும்."

தன் பிழையை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும் பக்தனைப்போலத் தன்னிடம் பேசும் தன் அண்ணனிடம் தாமோதரத்துக்கு ஒரு அனுதாபம் ஏற்பட்டது. வாலிப மிடுக்குடன் கவலை யற்றுத் திரியவேண்டிய இந்த வயதிலே அண்ணா வின் மனதில் என்னென்ன கவலைகளோ! அப்பா அவனோடு முகங்கொடுத்து பேசாமலிருப்பது அவன் மனத்தை பூவைக் குடையும் வண்டுபோலக் குடைந்துகொண்டிருக்கிறதா?

தாமோதரம் யோசித்துக் கொண்டிருக்கை யில், "இந்த வருஷம் நீ திருவிழாவுக்கு வர முடியாதுதான். ஆனா இப்ப இங்க நிக்கிற ரெண்டு கிழமைக்குள்ள எப்பெண்டான ஒரு நாளைக்குத் தம்பலகாமம் போய்க் கோணேசரைக் கும்பிட்டிற்று வா. இந்தா இத வச்சிக்க" என்று அவன் கைகளில் இரண்டு பத்து ரூபா நோட்டுக்களைத் திணித்தான் நாகேந்திரம்.

அண்ணனின் இரண்டு கைகளையும் பொத்திப்பிடித்துக் கொண்ட தாமோதரம் "எப்பெண் டாலும் இல்லண்ணா நாளைக்கே போறன்" என்று சொல்கையில் அவன் கண்கள் கலங்கின. குடும்பத் தில் உதவாக்கரை என்று எண்ணப்பட்ட தன் உடன்பிறப்பு தன்னிடம் எத்தனை அன்பும் பாசமும் கொண்டவனாக இருக்கிறான் என்றெண்ணியபோது அவன் மனம் புல்லரித்தது.

"சரி தம்பி நான் போயிற்று வாறன். இப்ப போய்ப் படுத்தாத்தான் பலபலவெண்டு விடியக்குள்ள எழும்பலாம்" என்று சொல்லிக்கொண்டே நாகேந்திரம் தன் வீட்டிற்குப் புறப்பட்டான். தாமோதரமும் எழுந்து தன் உடைகளைக் களைந்து மண்டபத்திற்குள் இருந்த கொடியிற் போட்டு வேற்றுடை மாற்றிக் கொண்டு துவாயுடன் கிணற்றை நோக்கி நடந்தான். பங்குனிப் புழுக்கத்திற்கு உடம்பில் குளிர்ந்த தண்ணீர் படுவது இதமாகத்தான் இருந்தது. தாமோதரம் குளித்து முடிந்ததும் அம்மா சாப்பிடக் கூப்பிட்டாள். 'சோறா? எனக்கு வேண்டாம்' என்றான் தாமோதரம்.

"சோறில்லை. இடியப்பம் அவிச்சிருக்கேன்" என்றாள் தெய்வானை.

தாமோதரம் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அண்ணன் கோணேசர் கோயிலுக்குப் போகும்படி கேட்டுக் கொண்டதை அம்மாவிடம் சொன்னான்.


"எனக்குத் தெரியும். பின்னேரமே என்னட்டச் சொன்னவன். அவன் விரும்புறாப் போலக் கோயிலுக்குப் போய் அர்ச்சனையும் பண்ணிற்று வாவன்"

"ஓம் அம்மா வெய்யில் ஏறமுன்னம் விடியப்புறமே வெளிக்கிட வேணும். ஆனாச் சைக்கிள் இல்லியே. இதுக்கு பிறகு யாரிட்டப் போய்க் கேட்பது"

"ஒருத்தரிட்டையும் கேக்க வேணாம். மாமாட சைக்கிள் அவர் வீட்டதான் இருக்கு. அவர் வயலடிக்குச் சாமான்கள் ஏத்திற்று வண்டியிலதான் போறார். நீ காலமையோட போய்ச் சைக்கிளை எடுத்திற்றுப் போ" என்று அவன் கவலையைப் போக்கினாள் தெய்வானை.

"எனக்குத் தெரியாதே. மாமா சைக்கிளில போயிருப்பார் என்றுதான் நினைச்சன். காலையில போய் சைக்கிளை எடுத்திற்றுப் போறன்" என்று தாமோதரம் கையலம்பி விட்டு மண்டபத்துட் சென்றான். பாயை விரித்து படுத்துக் கொண்டாலும் தாமோதரத்துக்கு நித்திரை வரவில்லை. அவன் நினைவுகளில் சௌந்தரம் தோன்றினாள், வைகறைப் பனியிற் தோய்ந்து இதழ்விரிக்கும் மல்லிகையைப் போல, அவள் மல்லிகைப் பந்தரடியிற் தண்ணீர் குடத்தோடு நின்ற தோற்றமும், அதே பந்தரின் கீழ் செக்கர் வானத்தின் செம்மை முகத்திற் படரத் தன் ஒற்றைப் பின்னலை மார்பின் மேல் தொங்க விட்டபடி கருஞ்சாந்துப் பொட்டு நெற்றியில் மின்ன அவள் நின்ற அழகும் அவன் நினைவுகளிற் காட்சியளித்தன. தனக்குப் பின்னாற் சின்னஞ் சிறுமியாய்த் தன் வாலா 'தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனாக்கிய' அந்த உருவமும். இனிமை

– 17ம் பக். பார்க்க...



# பார்வைகள் பலவிதம் - 13

ஹென்றி

ஒரு குடும்ப தலைவர் இறந்து விட்டார். அவருக்கு வயது 40 கூட ஆகவில்லை. அவரது மனைவி, ஒன்பது வயதான மகன், பெற்றோர் அனைவரும் உடலின் அருகே அமர்ந்து கதறி அழுதுகொண்டிருந்தனர். இந்தக் குடுமபத்திற்கே குருஜியாக விளங்குபவர் அப்போது அங்கு வந்தார். அவரைக் கண்டதும் அவர்கள் மேலும் பெரிதாக அழ ஆரம்பித்தனர். இறந்தவரின் மனைவி சொன்னாள்.

"குருஜி இவ்வளவு இளம் வயதில் என்னையும் என் மகனையும் நிர்க்கதியாக விட்டுப் போய்விட்டாரே? நான் என்ன செய்வேன்? அவர் உயிருடன் வருவாரென்றால் அதற்காக நான் எதுவும் செய்வேன்" என்றாள்.

குருஜி அவர்கள் அனைவருக்கும் ஆறுதல் சொல்லி சமாதானப்படுத்த முயன்றார். ஆனால், அவர்கள் சோகம் குறையவில்லை. கடைசியில் அவர்,

"ஒரு கோப்பை தண்ணீர் கொண்டு வாருங்கள்" என கேட்டார். தண்ணீர் வந்தது. அவர் கோப்பையை உடலின் அருகில் வைத்து தானும் அமர்ந்தார். பின் அவர்களிடம்,

"இறந்தவர் உயிருடன் திரும்பி வரவேண்டும் என நினைப்பவர், இந்தத் தண்ணீரை அருந்தலாம். இறந்தவர் திரும்பி வருவார். ஆனால், அதற்குப் பதில் நீரை அருந்தியவர் மரணமடைவார்" எனக் கூறினார்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் யாரும் முன்வரவில்லை. அவர் இறந்தவரின் தந்தையைக் கேட்டார்.

"ஐயா! நீங்கள் உங்கள் மகனுக்காக உங்கள் உயிரைக் கொடுக்க மாட்டீர்களா?"

தந்தை சொன்னார், "நான் இறந்து விட்டால் என் மனைவிக்கு யார் ஆதரவு? அவளுக்காக நான் வாழ வேண்டும்".

தாயைக் கேட்க அவள் சொன்னாள் "அடுத்த மாதம் என் மகளுக்குப் பேறுகாலம். நான் இறந்து விட்டால் அவளுக்கு யார் உதவுவது?"

மனைவி சொன்னாள் "நான் இறந்தால் என் பையனை யார் கவனித்து வளர்ப்பது? அவனுக்காக நான் வாழ வேண்டும்."

குருஜி பையனைப் பார்த்துக் கேட்டார் "குழந்தாய், உன் தந்தைக்காக நீ உயிர் விடுவாயா?" அவன் தாய் உடனே அவனை இழுத்து அணைத்துக் கொண்டு, "குருஜி உங்களுக்குப் பைத்தியமா? அவன் ஒரு குழந்தை. இனிமேல் தான் அவன் வாழ்க்கையே இருக்கிறது. அவனைப்போய் நீங்கள் கேட்கலாமா.....?"

குருஜி சொன்னார் "உங்கள் அனைவருக்கும் ஏதாவது கடமை, பொறுப்பு இருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். அப்படியானால் இவருக்கு இங்கு வேலையில்லை என்றாகிறது. எனவே தான் கடவுள் அவனை எடுத்துக்கொண்டார். இப்போது இறுதி யாத்திரைக்கான ஏற்பாடுகளைக் கவனியுங்கள்...." சொல்லி விட்டு அவர் சென்று விட்டார்.

உயிர் இருக்கும் வரையே அன்பு, பாசம் எல்லாம். பின் மிஞ்சுவது மகிழ்ச்சியான நாட்களின் நினைவுகள் மட்டுமே. எனவே, வாழும் வரை புன்னகைக்கும் முகத்தோடு மகிழ்வாக வாழ முயற்சிப்போம்.

*"உங்களைத் தவிர உங்களுக்கு அமைதியை வேறு எதுவும் கொண்டுவர முடியாது"*
*"கடமையைச் செய்யாமல் நடப்பதெல்லாம் விதி வசம் என்று சொல்வது சோம்பேறிகளின் வீண் பேச்சு"*
*"வாழ்க்கை என்பது கதைப்புத்தகமல்ல; அது ஒரு விசித்திரமான நாவல்"*
*"மகிழ்ச்சியைத் தேடாதீர்கள்; ஆனால் மகிழ்ச்சியாயிருக்க சதாகாலமும் தயாராயிருங்கள்"*
*"அமைதி இல்லாத மனதினால் எந்த உயர்ந்த தகுதியையும், நற்பயனையும் பெறமுடியாது"*



# அறிவார்ந்த முயற்சியே வெற்றிக்கு அத்திவாரம்



ஜே. எச். இரத்தினராஜா

முன்னொரு காலத்தில் சீனாவில் ஒரு பெரிய வியாபாரி, தனக்குப்பின் வியாபாரத்தை தன் மூன்று மகன்களில் யார் வசம் ஒப்படைப்பது என்று தீர்மானிக்க அவர்களுக்கு ஒரு போட்டி வைத்தான். யார் அதிக அளவு சீப்புகளை புத்த மடாலயத்திற்கு விற்கிறார்களோ, அவன்தான் தன் வியாபாரத்தை நிர்வகிக்கத் தகுதியானவன் என்று அறிவித்தான்.

மொட்டை அடித்துள்ள புத்த பிக்குகளிடம் சீப்பு வியாபாரமா என்று மகன்கள் மூவரும் ஆரம்பத்தில் திகைத்தனர். ஒரு சீப்பைக்கூட விற்க முடியாதே என்று நினைத்தனர். ஆனால், பின் மூவரும் முயற்சி எடுப்பது என்று முடிவு செய்தனர். அவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த சில நாட்கள் அவகாசம் கொடுத்த வியாபாரி அது முடிந்தவுடன் மகன்களை அழைத்து அவர்கள் எந்த அளவு வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என்று கேட்டான்.

ஒரு மகன் சொன்னான், "நான் இரண்டு சீப்புக்கள் புத்த மடாலயத்திற்கு விற்றேன்". வியாபாரி கேட்டான் "எப்படி?" "புத்த பிக்குகளிடம் இந்த சீப்பை முதுகு சொறியவும் உபயோகிக் கலாம் என்று சொல்லிப் பார்த்தேன். இரண்டு புத்த பிக்குகளுக்கு அது சரியென்றுபட்டது. அதனால் அவர்கள் இருவரும் இரண்டு சீப்புகள் வாங்கினார்கள்".

இன்னொரு மகன் சொன்னான், "நான் பத்து சீப்புக்கள் விற்பனை செய்தேன்" வியாபாரி ஆச்சரியத்துடன் கேட்டான் "எப்படி?" வழியெல் லாம் காற்று அதிகமாவுள்ளதால் மலை மேல் உள்ள அந்தப் புத்த மடாலயத்திற்கு செல்பவர்கள் தலை முடியெல்லாம் பெரும்பாலும் கலைந்து விடுகிறது. அப்படிக் கலைந்த தலைமுடியுடன் புத்தரை தரிசிக்க பக்தர்கள் செல்வது புத்தருக்குச் செய்யும் அவமரியாதையாகத் தோன்றுகிறது என்று புத்த மடாலயத்தில் சொன் னேன். ஒரு பெரிய கண்ணாடி யும் சில சீப்புகளும் வைத்தால் அவர்கள் தங்கள் தலைமுடியைச் சரி செய்துகொண்டு புத்தரை தரிசிக்கச் செல்வது நன்றாக இருக்கும் என்ற ஆலோசனையைச் சொன்னேன். ஒத்துக் கொண்டு பத்து சீப்புக்கள் வாங்கினார்கள்" வியாபாரி அந்த மகனைப் பாராட்டினார்.

மூன்றாம் மகன் சொன்னான். "நான் ஆயிரம் சீப்புகளை விற்பனை செய்தேன்" வியாபாரி ஆச்சரியத்தின் எல்லைக்கே சென்றார். "எப்படி?" "அந்த புத்த மடாலயத்திற்கு ஏராளமானோர் வந்து பொருளுதவி செய்கிறார்கள். அவர்களது உதவியை மெச்சி புத்தரின் ஆசிகள் அவர்களை வழிநடத்தும் வண்ணம் அவர்களுக்கு ஏதாவது ஒரு நினைவுப்பரிசு வழங்கினால், அது மேலும் பலரும் புத்த மடாலயத்திற்கு உதவி செய்யத் தூண்டும் என்றேன். அந்த மடாலயத் தலைவர் என்ன நினைவுப்பரிசு வழங்கலாம் என்று மடால யத் தலைவர் கேட்டார். நான் புத்தரின் வாசகங் களைப் பதித்து வைத்திருந்த சில சீப்புகளை நீட்டினேன். ஆந்த சீப்புகளை தினமும் உபயோகிக் கும் பக்தர்களுக்கு அந்த உபதேசங்களைத் தினமும் காணும் வாய்ப்பும் கிடைக்கும். அந்த உபதேசங்கள் அவர்களைத் தினமும் வழிநடத்து பவையாகவும் இருக்கும் என்று தெரிவித்தேன். அது நல்ல யோசனை என்று நினைத்த மடாலயத் தலைவர் உடனடியாக அப்படி புத்தரின் வாசகங் கள் பதித்த ஆயிரம் சீப்புகள் வாங்க ஒப்புக் கொண்டார்".

அந்த வியாபாரி எந்த மகனிடம் தன் வியாபா ரத்தை ஒப்படைத்தார் என்று சொல்ல வேண்டிய தில்லை.

மொட்டை பிக்குகளிடம் சீப்பு விற்கப்போவது கண்டிப்பாக ஆகாத வேலை என்று நினைப்பதுதான்

பொதுவாக நாம் காணக்கூடிய மனோபாவம். விதி சில சமயங்களில் நம்மைக்கொண்டு சேர்க்கும் சூழ்நிலையும் கிட்டத்தட்ட இதேபோலத்தான் இருக்கும். அதிலிருந்து மீள்வதற்கு வழியே இல்லை என்று முதலில் தோன்றும். ஆனால், அதை ஒப்புக்கொண்டு முடங்கி நிற்போமானால் நாம் தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டோம் என்பது பொருள்.

அந்த வியாபாரியின் மகன்கள் ஏதாவது முயற்சி செய்ய வேண்டுமென்று தீர்மானித்தது புத்திசாலித்தனமான செயல். நாமும், நாம் இருக்கும் அந்த மோசமான சூழ்நிலைக்குத் தீர்வே இல்லை என்று ஆரம்பத்தில் தோன்றினாலும், ஏதாவது செய்து நல்ல தீர்வைக் காணவேண்டும் என்று தீர்மானிப்பதுவே அறிவு.

முயற்சிகளிலும் பலவகை உண்டு என்பதற்கு வியாபாரியின் மூன்று மகன்கள் முயற்சிகளே உதாரணம். ஒரு மகன் புத்த பிக்குகளுக்கு தலை வார சீப்பு பயன்படாவிட்டால் வேறெதற்காவது பயன்படுமா என்று யோசித்ததன் பலனாக இரண்டு சீப்புகள் அவனால் விற்க முடிந்தது. புத்த பிக்குகளுக்கு சீப்பு பயன்படாமல் போனாலும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சீப்பு பயன்படுமா என்று இன்னொரு மகன் யோசித்ததால் அந்த புத்த மடாலயத்தின் முன்புறம் சில சீப்புகள் வைத்து பக்தர்கள் தலைமுடியை முறையாக வாரிக்கொண்டு உள்ளே நுழைய உதவியாக பத்து சீப்புகள் விற்க முடிந்தது.

ஆனால், இந்த இரண்டு மகன்களுடைய முயற்சியாலும் தொடர்ந்து அந்த மடாலயத்திற்கு சீப்பு விற்க வழியில்லை. அவர்களுடைய விற்பனை ஒரு முறையோடு முடிந்துபோய் விட்டது.


மூன்றாம் மகன் கூட இரண்டாம் மகன் போலவே புத்த பிக்குகளுக்குப் பயனில்லா விட்டாலும், அவர்களுடன் சம்பந்தப்படும் மற்றவர்களுக்குப் பயன்படுமல்லவா என்கிற சிந்தனையைத்தான் செய்தான். அந்த வெறும் சீப்பை புத்தரின் உபதேசங்களைச் செதுக்கி அதை அவர்கள் விரும்பும் வண்ணம் உயர்த்தி அதை நன்கொடை வழங்கும் பக்தர்களுக்கு புத்தரின் ஆசியாக மாற்றி விற்பனை செய்தான். அதற்காக அவன் எடுத்துக்கொண்ட உழைப்பு எல்லாம் மற்றவர்களை மிஞ்சும் வண்ணம் வெற்றி பெற்றது.

மேலும், மற்ற இருவரைப்போல் இவனுடைய விற்பனை ஒரு முறையோடு முடிகிற விற்பனை அல்ல. புத்த மடாலயத்திற்கு நன்கொடைகள் தருகிறவர்கள் அதிகரிக்க அதிகரிக்க இவன் விற்பனையும் அதிகரிக்கும்.

ஒரு சூழ்நிலையை ஒரே நேர்கோணத்தில் பார்ப்பது இரண்டு சீப்பு விற்ற மகனைப்போல அற்ப விளைவுகளையே ஏற்படுத்தும். பார்வையை சற்று விரிவுபடுத்தி வேறு கோணங்களிலும் சிந்தித்து செயல்படுவது பத்து சீப்பு விற்றவன் முயற்சிபோல நல்ல விளைவுகளை அதிகரிக்கும். மேலும், பல கோணங்களிலும் சிந்தித்து, தன் திறமையையும் உழைப்பையும் சேர்த்து முயற்சி செய்பவன் அடையும் நன்மைகள் ஆயிரம் சீப்புகள் விற்பனை செய்தவன் முயற்சியைப்போல பல மடங்கு அதிகரிக்கும். ஆரம்பத்தில் வழியே இல்லை என்று தோன்றியது போய் புதிய பிரதேசங்களுக்கு நம்மை அழைத்துச் செல்லும் வாய்ப்பாக அமையும்.

எனவே, எந்தவொரு கடினமான சூழ்நிலையிலும் மனம் துவண்டு விடாதீர்கள். முடியாது என்று தோன்றும் ஆரம்ப அபிப்பிராயத்திற்கு அடிபணியாதீர்கள். பார்வையை விரிவுபடுத்துங்கள். புதிய புதிய கோணங்களில் சிந்தியுங்கள். சில சிறிய மாற்றங்களால் பெரிய விளைவுகளை ஏற்படுத்த முடியுமா என்று யோசியுங்கள். பொறுமையுடனும், நம்பிக்கையுடனும், துடிப்புடனும் முயன்றால் அந்தக் கடினமான சூழ்நிலையே நீங்கள் அடையப்போகும் அளப்பரிய வெற்றிகளுக்கு அத்திவாரமாக அமையக்கூடும். ■





# (சோ)சாதனை

சென்ற இதழின் தொடர்..... 2

– ந. பார்த்தீபன் –
ஓய்வுநிலை உப பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி.

**எ**ன் அப்பாவின் ஒன்றுவிட்ட சகோதரி சரஸ்வதி மாமி. அவரின் ஏனைய சகோதரிகளை விட இவவைப் பற்றித்தான் அப்பா அடிக்கடி கூறுவதை நான் கேட்டிருக்கிறேன்.

இப்போது ஆளாளுக்கு ஒரு காணி வாங்கியதோடு, கொஞ்சம் தூரங்களிலும் எல்லோரும் வீடு கட்டி வாழ்வதனால் அந்தக் காலத்து வாழ்க்கையின் அருமை பெருமைகள் எங்களுக்கு தெரியவில்லை என்று அப்பா கதை கதையாகச் சொல்வார்.

சுற்றிவர மதில்களும் கட்டி, அடுத்த வீட்டில் என்ன நடக்குதென்று தெரியாத வாழ்க்கை எங்களுடையது. அட, வெளிநாடுகளில் ஒரே வீட்டில் இருக்கிற கணவன் மனைவி கூட சந்திக்க முடியாத காலம். கணவன் வேலைக்கு போகும் போது வீட்டில் இருக்கும் வைட் போட்டில் எழுதி... 'பிள்ளைகளைக் கொண்டு போய் விட்டு விடுகிறேன். நீ போய் கூட்டிக்கொண்டு வா. நான் பின்னேரம் ஐந்து மணிக்குத் தான் வருவேன்' என்று எழுதி இருப்பார். பின் மனைவியும் எழுதி விட்டுச் செல்வாளாம். எங்கடை வாழ்க்கை பரவாயில்லை என ஆறுதல்பட்டுக்கொள்ளும் இன்றைய வாழ்க்கை நிலை எங்களுடையது.

சரஸ்வதி மாமி ஆக்களுக்கு ஆண் சகோதரர்கள் இல்லை. அதனால் பெரியப்பா, அப்பா, சித்தப்பா ஆகியவர்களில் அளவற்ற பாசத்தை ஊட்டி வளர்த்ததாகவும் தம்பி, தம்பி என்று தங்களுக்கு உணவு, சின்னச் சின்ன உதவிகள் செய்ததாகவும் கூறுவார்.

மூத்தக்கை என்றுதான் எல்லோரும் அழைத்ததாகவும் தங்களுடைய வாழ்க்கை அவ்வளவு ஒற்றுமையாக இருந்ததாகவும் சொல்வார். இன்று சொந்தச் சகோதரங்களோட கூட ஏதாவது காரணம் காட்டி பிரிந்து நிற்கும் வேளையில் தங்களுடைய ஒற்றுமையை கண்கலங்கக் கூறுவார்.

முருகேசு மச்சான் அடிக்கடி குடித்துவிட்டு வந்து மூத்தக்கையோடை பிரச்சினைபடும் நேரங்களில் 'ஏன் அத்தான் இப்படிக் குடிக்கிறாய்?' என்று கேட்டால்.....'

"எடேய் உங்களுக்கு தெரியுமே என்ரை தொழில் கஷ்டம்..... தபாலை எடுத்துக்கொண்டு எவ்வளவு தூரம் சைக்கிள் ஓடுவது? கால்–கை உளைவுக்கு கொஞ்சம் குடிக்கிறன். அதுக்கு பெரிய விளக்கம் எடுக்கிறியள். எல்லாத்துக்கும் உவள் சரசிதான் காரணம். தம்பிமாரைக் கொண்டு என்னை வெருட்டப் பாக்கிறாள். அறுக்கைபண்ணப் பாக்கிறாள்' என்று அதற்காகவும் சரஸ்வதி மாமியைச் சண்டைக்கிழுப்பார்.

குடித்தால் சண்டை பிடிக்க ஆயிரம் காரணங்கள் அவருக்கு இருக்கும். ஆனால் வெளியாட்களுடன், அயலாக்களுடன் ஒருபோதும் அவர் சண்டை பிடிக்கவில்லை என்பது சரஸ்வதி மாமிக்கு அதற்குள்ளும் பெரிய ஆறுதல், ஒரு சந்தோஷம்.

எனக்கு என்னடா மூண்டு முத்துக்கள். மூன்று ஆம்பிளைப் பிள்ளைகள் என்பதில் அவருக்கொரு பெருமை.

அந்த நேரத்தில் நிலவிய சீதனம், சொத்து, வீடு, நகை என்பவற்றோடு ஒப்பிட்டால்... பெண் பிள்ளைகளை கரை சேர்ப்பதென்பது வயிற்றில்

நெருப்பைக் கட்டிக்கொள்வது என்று சும்மாவா சொல்லிக்கொண்டார்கள்.

காலப்போக்கில் முருகேசு மாமா நல்லாத் திருந்திக் கொண்டார் என்று தான் சொல்ல வேண்டும். பிள்ளைகள் தலைநிமிர... என்பது முருகேசு மாமாவின் வாழ்க்கையிலும் நல்ல பல மாற்றங்களைக் காட்டியது.

மாமா பென்ஷன் எடுத்து கொஞ்ச நாளுக்குள் சரஸ்வதி மாமி படுக்கையாகி விட்டார். நாட்டு வைத்தியம், ஆங்கில மருத்துவம், சாத்திரம் பார்த்து பூசைகள், பரிகாரம் செய்தல் என பார்க்க வேண்டியதெல்லாம்தான் பார்த்தாலும் என்னவோ அவர் நிலையில் மாற்றமில்லை.

மனைவியின் காரியங்களுக்கு உதவி, ஒத்தாசை செய்து பிள்ளை போல் மனைவியைப் பார்த்தெடுத்தார் என்பதை பலரும் சிலாகிப்பதுண்டு .

சரஸ்வதி மாமியின் அன்பும் அரவணைப்பும் கிடைத்த பெரியப்பா, அப்பா, சித்தப்பாவின் ஆதரவில் துரைராசா இங்கிலாந்துக்குப் போனது அவர்களுக்குப் பெரிய ஆறுதல். பின் பஞ்சனும் துரையின் உதவியோடு கனடாவுக்கு போக... குடும்பம் மேலும் நல்ல நிலைக்கு வந்தது.

முருகேசு மாமா பிள்ளைகளின் சந்தோஷமும் மனைவியின் கவலையுமாகக் காலத்தை கடத்திக் கொண்டிருந்தார்.

ரவீந்திரனுக்கும் தந்தையார் போஸ்ட் பியூனாக இருந்ததன் காரணமாக தானும் ஊரோடு ஒரு போஸ்ற் பியோனாக தொழில் பெறும் வாய்ப்பு கிடைத்தது.

தாயையும் தந்தையையும் பார்க்க ஒருவனாவது ஊரோடு இருப்பது நல்லது என்ற யதார்த்தமும் பலரது அபிப்பிராயங்களும் இணைந்ததால் ஊரோடு தொழிலைச் செய்வதே உசிதம் என்ற மனநிலைக்கு அவனும் வந்து விட்டான். அத்தோடு தமையன் இரண்டு பேரும் நாங்கள் பணம் அனுப்புவோம். நீ தூர இடங்களுக்கு உத்தியோகத்திற்கு செல்வதோ வெளிநாட்டுக்கு வர விரும்பவோ வேண்டாம் எனத் தடுத்து விட்டனர்.

சரஸ்வதி மாமி படுக்கையான போதும் ஒருவரது உதவியுடன் தன்னுடைய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வார்.
வயதும் மூப்பும், இளமைக் காலத்தில் அதிகம் கஷ்டப்பட்டதும் மெலிந்த தோற்றமுள்ள மாமியை பார்த்து எடுப்பது பெரிய கஷ்டமாக இருக்கவில்லை என்ற நிலையில் அவருடைய ஓர்மமும் நூறு வயது வரை கொண்டு வந்து விட்டிருக்கிறது.

சரஸ்வதி மாமி எண்பதாவது வயதில் தனது பூவையும் பொட்டடையும் இழந்த போது எல்லோரும் கலங்கிப் போனோம்.

முருகேசு மாமா நோயென்று படுக்காமல் ஒருநாள் நெஞ்சுக்குள்ளே குத்துது என்றார். ரவியும் சுடுதண்ணீர் குடிக்கக் கொடுத்திட்டு ஓட்டோ ஒன்றை அழைத்துவரச்சொல்லி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக ரவியின் தோளில் சாய்ந்தபடியே தன் உயிரை விட்டு விட்டார்.

அதன் பிறகு சரஸ்வதி மாமி நன்றாக நொந்துபோனார். படுக்கையில் இருக்கும் தன்னைக் கொண்டு போகாமல் நடந்து திரிந்த தன் கணவனை கொண்டு போனது என்று இதுவரை யாரையும் திட்டிப் பேசி அறியாத மாமி இயமனைத் திட்டித் தீர்த்த.... அந்தக் கோபமோ என்னவோ இயமன் சரஸ்வதி மாமிக்கு கிட்ட வரவே இல்லைப் போல...

மாமி நல்ல குணமோ என்னமோ ரவியின் மனைவியும் 'மாமி, மாமி' என்று மிகவும் இரக்கமாகவும் பாசமாகவும் கரிசனையோடு பார்த்து பராமரித்துக்கொள்கிறாள்.

வயது போகப்போக வாக்கு மாறும் என்பார்கள். சரஸ்வதி மாமிக்கு என்ன கொடையோ இன்றுவரை வாக்கு மாறவில்லை. பார்வை சற்று மங்கலான போதும் குரல்களை வைத்து ஆட்களை இனம் கண்டு கொள்வார்.

'யார் பாபுவோ..?' நான் குரலை மாற்றி கதைத்தாலும் கண்டு கொள்வார்.

***********

– தொடரும்....

ஒரு வெண்மணற் கிராமம் ....

யும் எப்படி அவளுக்கு இந்த ஒரு சில மாதங்களில் வந்து விட்டன?

சென்ற ஆண்டு தம்பலகாம திருவிழா விற்குச் சென்றிருந்தபோதும் அவள் சிறுமியாகத் தான் இருந்தாள். திருவிழாக் கடைத் தெருவெல் லாம் தன்னோடுதான் சுற்றினாள். தாமோதரம் கோணேசர் கோயிலையும் தம்பலகாமத்தையும் நினைத்துக் கொண்டான்.

– தொடரும்....

# நவீன சமூகச் சிக்கல்கள்



சசீந்திராணி ஸ்ரீ மொழிச்செல்வி



அல்லாடும் வாழ்வில்
தள்ளாடும் மனிதம்
அன்பென்ற எல்லைக்குள்
தவித்திடும் சமூகம்

படிப்பினைப் புகட்டிட
மதிப்பினைத் தேடிடும்
மனங்களின் கணக்குகள்
பணத்தினை நாடிடும்

கனவுகள் தொலைந்திடக்
கற்பனை செய்திடும்
நனவுகள் மெய்ப்பட
நர்த்தனம் புரிந்திடும்

மரபுகள் மறந்தே
மருத்துவம் நாடிடும்
மக்கிய மூளையை
மருண்டே பார்த்திடும்

குணமது தேடியே
கணமதைத் தொலைத்திடும்
கற்றிட மறந்தவை
முற்றிலும் விலகிடும்

சிந்தனை கொண்டிடச்
சிகரங்கள் எட்டிடும்

சினமதை விடுத்தே
சிநேகம் கொண்டிடும்

நினைவில்லா வாழ்க்கையில்
நிந்தனை கொண்டிட
நிதர்சன நிமிடங்கள்
நின்றே மறந்திடும்

இறைதனைக் காட்டிட
இரைதனைத் தேடிடும்
இன்றைய நிலையினில்
கறைதனைச் சேர்த்திடும்

வயதுக்கு மிஞ்சிய
வஞ்சனை கொண்டிடும்
மூத்தோர் மனங்களை
மதியாது போய்விடும்

இளமைத் தலைமுறை
சீரற்றே போய்விடும்
இனிமை என்றே
நவீனத்தை நாடிடும்

சீர்கேடு என்று
தெரிந்தே பின் செல்லும்
பட்ட பிறகே
பாடத்தைக் கற்று அழுதிடும்

மனிதம் மறந்தே
மனங்களும் தூங்கிடும்
மகத்துவம் மறந்தே
மாண்டு போய்விடும்

இனியும் திருந்தா
இனத்தின் பிரிவை
இயலாமை என்றெ
இயற்றிடத் தோன்றிடும்

இலக்கியம் மறந்தே
இயற்றிடும் தமிழும்
இலக்கணந் தவறி
இமயத்தைத் தொட்டிடும்

சுவாசிக்க நினைத்தே
சுவைத்திடும் உணர்வை
சுகமாய் நினைத்து
சுவர்க்கம் கண்டிடும்

உதவிடும் கரங்கள்
உயிரினைக் காத்திட
உரிமைகள் கூடிட
உறவுகள் பலப்படும்

பண்பில்லா உள்ளத்தில்
அன்பில்லாக் கொள்கை
பரந்திடும் மனமோ
பாரினில் மறந்திடும்

ஏனிந்த நிலையென்று
ஏங்கித் தவித்திட
ஏளனம் செய்தே
ஏகாந்தம் கொள்ளும்

மாண்பில்லா மனமும்
மாறாத குணமும்
மரித்திடும் மனிதம்
மயங்கிடும் இருளில்

கடந்தவை போகட்டும்
கற்பனை நலம்பெற
காலத்தை இறைஞ்சியே
காரியம் சாதிப்போம்

# பெந்தகோஸ்தே



பெந்தகோஸ்தே பாரம்பரியமாக திருச்சபையின் பிறந்தநாளைக் குறித்து நிற்கின்றது. தந்தையாகிய இறைவன் நம்பிக்கையாளர்களை எல்லாம் ஒன்று கூட்டிச் சேர்ப்பதைக் கொண்டாடுகிறோம். தந்தையின் அன்பில் ஒன்றிணைக்கப்படுகின்றோம்; இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஒன்றிணைக்கப்படுகின்றோம்; ஆவியின் வல்லமையினால் ஒன்றிணைக்கப்படுகின்றோம். எமது திருச்சபை திருத்துவ இயல்பைக் கொண்டது. எமது வழிபாடும் திருத்துவ இயல்பைக் கொண்டது. எமது வழிபாடும் திருத்துவத்தை மையப்படுத்தியே அமைந்தது. திருப்பலியானது தந்தை மகன் தூய ஆவியை அழைப்பதில் தொடங்கி முடிகின்றது.

எமது திருச்சபையானது “மங்களவார்த்தை அறிவிப்பு” மறைபொருளில் தொடங்கியது. தந்தை எம்மை அன்பு செய்து வார்த்தையை அனுப்பினார். திருச்சபை பிறப்ப தற்கு 30 ஆண்டுகளாயின. மரியாவின் “ஆம்” என்ற வார்த்தையில், கபிரியேல் தூதர் கொண்டு வந்த அழைப் பிற்கு “ஆம்” என்று சம்மதம் தெரிவித்ததால் ஆவியாரின் வல்லமையினால் வார்த்தை மனுவுரு எடுத்தது. கன்னி மரியின் உதரத்திலிருந்து பிறந்தார். வார்த்தை மனுவுரு எடுத்து எம்மிடையே குடி கொண்டார்.

பெந்தகோஸ்தே ஞாயிறு அன்று தூய ஆவியானவர் எருசலேமில் கூடியிருந்த அனைவர் மேலும் இறங்கினார். அவர்கள் இயேசு கிறிஸ்துவினுடைய இறப்பையும் உயிர்ப்பையும் அறிவித்த திருத்தூதரின் போதனையைக் கேட்டார்கள். கடவுளின் அன்பிற்கு செவிமடுத்தவர்கள் இறைவார்த்தையை தங்கள் தங்கள் மொழியிலேயே கேட்டார்கள். திருத்தூதர் அரமேயம் அல்லது எபிரேயம் மொழியிலே பேசியி ருப்பார்கள்.

அங்கே பார்த்தரும், மேதியரும், எலாமியரும், மொசப்பொத்தேமியா, கப்பதோக்கியா, பிரகியா, சிரேன் நகரத்த வர்களும் கடவுளின் வார்த்தையைத் தங்கள் மொழிகளிலேயே கேட்டனர். அங்கு நேரடி மொழிபெயர்ப்பு எதுவும் இடம்பெறவில்லை. பெரும்பாலும் அது பரவசப்பேச்சு மூலம் விளக்கப்படுகிறது. அதனை நாம் “புரிந்துகொள்ளுதல்” என்ற கொடையின் மூலம் விளக்கலாம். இறைவனுடைய வார்த்தையைப் புரிந்து கொள்ளுதல்.

புனித பவுல் நல்லதொரு விளக்கம் தருகிறார், “நாம் பலராயிருந்தாலும் ஒன்றாக இருக்கின்றோம். நாம் நம்பிக் கையில் ஒன்றாக இருக்கின்றோம். திருமுழுக்கில் ஒன்றாக இருக்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் உடலில் ஒன்றாக இருக்கின்றோம். நாம் புற இனத்தவராக, யூதராக, வயது முதிர்ந்தவராக, இள வயதினராக, அடிமைகளாக, சுதந்திரம் உடையவர்களாக இருக்கலாம். ஆயினும் நாம் ஒன்றாகவே இணைக்கப்படுகின்றோம். எல்லைகள், தடைகள், வரையறைகள் எம்மைப் பிரிக்க இயலாது. ஆவியினால் அன்பின், மகிழ்ச்சியின், அமைதியின், பொறுமையின், தாராள குணத்தின், பிரமாணிக்கத்தின், எளிமையின், தன்ன டக்கத்தின் கொடைகளைப் பெற்றுள் ளோம். இதுவே உயிர்த்த இயேசு, உயிர்ப்பு பெருவிழாவின்போது வழங் கிய “அமைதி” என்ற கொடையாகும். இதனையே இயேசு திருத்தூதருக்கும், அவர்கள் வழியாக நமக்கும் வழங்கி யுள்ளார். இன்று இந்த அமைதி குவளையின் வாய்வரை நிரப்பப்பட்டு அமுக்கப்பட்டு நிரம்பி வழிகிறது.

நாமும் இதனையே நினைக்கின்றோம்
நாம் நம்புகின்றோம்
நாம் கொண்டாடுகின்றோம். •

“பிரார்த்தனை உதட்டிலிருந்து வரக்கூடாது: இதயத்திலிருந்து வரவேண்டும். அதுவும் தனக்காக செய்யாமல் பிறருக்காகச் செய்வது மிகவும் உயர்ந்தது.”

# கூட்டொருங்கியக்கத் திருஅவை



■ அருட்தந்தை பிறைனர் செலர்




**1.நமது பங்கு மாமன்றத்தின் நோக்கம் என்ன?**

இறை மக்கள் (பொது நிலையினரும் திருநிலையினரும்) ஒருவர் ஒருவருக்குச் செவி கொடுத்து, அனைவரும் இணைந்து, தூய ஆவியானவர் திருஅவையான நமக்குச் சொல்ல விரும்புவது என்ன என்பதை அர்ப்பண மன நிலையுடனும் திறந்த உள்ளத்துடனும் செவி மடுத்துக் கேட்டுச் செயல்படுவதே பங்கு மாமன்றத் தின் நோக்கம் ஆகும்.

1. தூய ஆவியானவர் எவ்வாறு வரலாற்றில் திருஅவையின் பயணத்தை வழிநடத்தி யுள்ளார் என்பதையும் இன்று எவ்வாறு நம்மை இறையன்பின் சாட்சிகளாக அழைக்கிறார் என்பதையும் நினைவுகூர,
2. அனைவரும் பங்கேற்ககூடிய, அனைவரை யும் உள்ளடக்கிய, குறிப்பாக பல கார ணங்களுக்காக விளிம்பு நிலையில் உள்ள வர்கள், இறைமக்களின் மேம்பாட்டுக் காகத் தாங்கள் சொல்ல விரும்புவதை வெளிப்படுத்தவும் திரு அவை அவற்றைச் செவிமடுத்துச் செயல்படும் வாய்ப்பைப் பெறவும்,
3. திருஅவையின் நலனுக்காகவும், ஒட்டு மொத்த மனிதக் குடும்பத்தின் நன்மைக் காகவும் ஆவியார் தாராளமாக பொழி கின்ற பல்வகைப் பணிகளையும் அரும் கொடைகளையும் அடையாளம் காண,
4. நற்செய்தியை அறிவிப்பதிலும் இன்னும் அழகான, வாழத் தகுந்த உலகை கட்டி யெழுப்பும் முயற்சியிலும் பொறுப்புடன் பங்கேற்றுச் செயல்படுவதற்கான வழி முறைகளை இனம்காண,
5. திருஅவையில் அதிகாரமும் நிர்வாக அமைப்புக்களும் எவ்வாறு செயல்படு கின்றன என ஆய்ந்திட, நற்செய்தியில் வேரூன்றாத காலாவதியான சிந்தனை களை மற்றும் செயல் பாணிகளை மாற்றியமைக்க,
6. சமூக உரையாடல், நலப்படுத்தல், ஒப்பு ரவு, பங்கேற்பு என்பனவற்றை உள்ளடக் கிய மக்களாட்சியாக கிறிஸ்தவச் சமூ கத்தை வளர்த்தெடுக்க,
7. கிறிஸ்தவ குழுக்களின் உறுப்பினர்களி டையிலும் பிற கிறிஸ்தவச் சபைகள், பல சமயங்கள், மக்கள் இயக்கங்களுடன் உரையாடி, உறவாடி, ஒத்துழைப்பை வளர்க்க,
8. உலகளவில், கண்டங்களில், நாடுகளில், தலத்திருஅவையில் நடைபெறும் மாமன்ற அனுபவங்களின் கனிகளைப் பாராட்டி நமதாக்கிக் கொள்ளும் மன நிலையை வளர்க்க,

**(மாமன்ற தயாரிப்பு ஏடு,2),**

9. ஆவணங்களை வெளியிடுவது அல்ல செயல்முறைகளை உருவாக்குவது முக்கி யம்.

**கனவுகளை விதைக்க,**
**இறைவாக்குகளை, காட்சிகளை எடுத்து ரைக்க,**
**எதிர்நோக்கினை வளர்க்க,**
**நம்பிக்கையை ஊக்குவிக்க,**
**காயங்களைக் குணமாக்க,**
**உறவுகளை ஒன்றிணைக்க,**
**நம்பிக்கையை விடிய வைக்க,**
**ஒருவர் ஒருவரிடமிருந்து கற்றுக்கொள்ள,**
**அறிவூட்டும், இதயத்திற்கு இதமான,**
**கரங்களை வலுப்படுத்தும்**

வளங்களை உருவாக்க.
(மாமன்றத் தயாரிப்பு ஏடு, 32)

**2. ஒன்றிப்பு உறவு, சமத்துவப் பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு**

**அ. ஒன்றிப்பு உறவு**

இயேசு தம் ஆண், பெண் சீடர்களுடன் நடமாடும் ஒரு எடுத்துக்காட்டான இறையாட்சிக் குடும்பமாகவே (மாற் 3:31-34) வாழ்ந்து பணி செய்தார். அது அப்பா கடவுளின் அன்பு அனுபவத் தால் ஒன்றுபட்ட சகோதரக் குழுமம் (மத் 23:8, யோவா 15:15).

இயேசுவின் சீடர்கள் அவருடன் கொண்டிருப்பது உயிராந்த ஒன்றிப்புறவு. "நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கிளைகள்" (யோவா 15:5) என அவரே அதனை உருவகப்படுத்தியுள்ளார்.

புனித பவுல் இந்த ஒன்றிப்புறவைச் சுட்டிக் காட்ட "தலை உடல்" எனும் உருவகத்தை கையாளுகிறார் (1கொரி 12). இந்த ஒன்றிப்புறவு நம்பிக்கையாளர்களுக்கு இடையே ஓர் உயிரார்ந்த இணைப்பையும் பிணைப்பையும் ஏற்படுத்துகிறது.

உடலின் "ஓர் உறுப்பு துன்புற்றால் மற்ற எல்லா உறுப்புக்களும் சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புக்களும் சேர்ந்து மகிழ்வுறும்."(1 கொரி 12:26)

ஆக, இதைப்போல் திருஅவையில் ஒதுங்கியிருப்போர் ஓரங்கட்டப்பட்டவர்கள் கண்டு கொள்ளப்படாதவர்கள் என எவரும் இருத்தல் ஆகாது. ○

## வினா விடைப் போட்டி - இல 37

**சரியான விடைகள்**

1. "நீங்கள் கடவுளுடைய பல்வகை அருள் கொடைகளின் சீரிய பொறுப்பாளர்கள். எனவே, உங்களுள் ஒவ்வொருவரும் தாம் பெற்றுக்கொண்ட அருள்கொடையைப் பயன்படுத்தி ஒருவருக் கொருவர் பணிபுரியுங்கள்" (1 பேதுரு 4:10).
2. பாவிகளுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட பாஸ்கா பலியை நாம் நாள்தோறும் நினைவுகூர்ந்து திருப்பலியாக ஒப்புக் கொடுக்கின் றோம்.
3. கலீல் கிப்ரான்
4. "தாய்மொழியும் நமது நிலையும்"
5. அருள்பணியாளர் Dirk Beginner
6. இந்தியா
7. 1752ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதி ஆரல்வாய் மொழி கற்றாடி மலையில் வைத்து இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
8. கடவுளை மக்களிடம் கொண்டு வருவது
   மக்களை கடவுளிடம் கொண்டுவருவது
9. 1. உலகளாவிய திருஅவையின் நன்மைக்கு
   2. அசாதாரண உலக ஆயர்கள் மாமன்றம்
   3. சிறப்பு உலக ஆயர்கள் மாமன்றம்
10. "இதயத்தின் காது கொண்டு செவிமடுத்தல்"

***சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:***

- **சா. வேஸ்வரன் ஆன்ட்சர்கி,**
  இல. 13/5, காசி நாதர் வீதி,
  பாலமீன்மடு, மட்டக்களப்பு.
- **டெ. அக்ஷிதா டேனிஷா,**
  3ம் குறுக்கு, இருதயபுரம்,
  மட்டக்களப்பு.
- J. **லதா,**
  சித்திவிநாயகர் வீதி,
  புன்னைச்சோலை,
  மட்டக்களப்பு.

பங்குபற்றியோர் - 09 பேர்
சரியான விடை எழுதியிருந்தோர் - 08 பேர்




**1. நெஞ்சு சளி**

*தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆற வைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.*

**2. தலைவலி**

*ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு, 2 லவங்கம், சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.*

**3. தொண்டை கரகரப்பு**

*சுக்கு, பால் மிளகு, திப்பிலி, ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.*

**4. தொடர் விக்கல்**

*நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து, தேன் சேர்த்து சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.*

**5. அஜீரணம்**

*ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை, இஞ்சி, சீரகம், மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் சரியாகும்.*

# போராட்ட வாழ்வை பூந்தோட்டமாக்க உதவுவோம்



ஒரு நாள் மாணவன் ஒருவன் தன்னுடைய ஆசிரியர் வீட்டிற்குச் சென்றிருந்தான். "வா மகனே" என்று அவனை அன்போடு வரவேற்ற ஆசிரியர், "இந்த நாற்காலியில் உட்காருப்பா" என்று அவனை அமரவைத்து பேசிக்கொண்டிருந்தார். சிறிதுநேரம் சென்று தேனீர் கொண்டுவந்து கொடுத்தார் ஆசிரியர். அதைக் குடிக்காமல் அந்தக் கப்பிலுள்ள தேனீரையே மிரள மிரளப் பார்த்துக்கொண்டிருந்தான் மாணவன். "குடி குடி..." என்று சொல்லிக்கொண்டே இருந்தார் ஆசிரியர். ஆனால் அந்த மாணவனோ தேனீரைக் குடிப்பதாகத் தெரியவில்லை. அதனால் ஆசிரியர் மாணவனைப் பார்த்து, தம்பி உனக்கு என்னதான் பிரச்சனை அப்படின்னு கேட்டுவிட்டு அந்த தேனீர் கோப்பையை வாங்கிப் பார்த்தார். அந்தத் தேனீருக்குள் ஒரு ஈ தத்தளித்துக்கொண்டிருந்தது. உடனே ஆசிரியர் வாசலுக்கு ஓடிப்போய் ஓர் இலையைப் பறித்துவந்து, அந்த ஈயை எடுத்து அந்த இலைமேல் வைத்தார். உடனே அந்த ஈ, அது உடம்பிலிருந்த ஈரம் காய்ந்தவுடன் ஒரு நொடியில் பறந்துபோனது. பின்னர் ஆசிரியர் வீட்டுக்குள் வந்து, மாணவனிடம், "ஆனாலும் தம்பி, உனக்கு இவ்வளவு அகங்காரம் கூடாது" என்று சொன்னார். மாணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. "சேர், நீங்க தேனீரைக் கொடுத்தவுடனேயே குடிக்கத்தான் போனேன். ஆனால், அதில் ஈயைப் பார்த்ததும், அதைச் சொன்னால், உங்களது மனது கஷ்டப்படும் என நினைத்து, என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறிக்கொண்டிருந்தேன்..." என்றான் மாணவன். அதற்கு ஆசிரியர், "தம்பி தேனீரில் ஈயைப் பார்த்தவுடன், அதைக் குடிக்கிறதா, வேண்டாமா என்ற பிரச்சனை உனக்கு, ஆனால், அந்த ஈக்கு வாழ்வா சாவா என்ற உயிர் பிரச்சனை, உன்னை மையப்படுத்தியே நினைத்துக் கொண்டிருந்தாயே, அதனால் தான் உன்னை அகங்காரம் பிடித்தவன் என்று சொன்னேன்" என்றார்.

இன்று சமுதாயத்தில் பலர் மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. பலரிடம் பேசும்போது இதை நாம் கவனித்திருக்கலாம். தங்களின் சாதனைகள், சொத்து சுகம், செல்வம், வசதி வாய்ப்புகள் வேலை இப்படியே பெருமை பேசிக்கொண்டிருப்பார்கள். இத்தகைய மனிதரின் உலகம், உச்சந்தலையில் தொடங்கி, உள்ளங்காலில் முடிந்துவிடும். மற்றவர்களை இவர்கள் ஒரு பொருட்டாகவே கருதமாட்டார்கள். இவர்களது உலகம், "நீயில்லாத உலகம், நான் மட்டுமே" என்ற தன் முனைப்பிலே இருக்கும். இந்த பிரபஞ்சத்தில் இவர்கள் வாழ்வில் மற்ற மனிதருக்கு இடமே கிடையாது. இந்த மனிதர்களுக்கு மத்தியில், வாழ்வா சாவா என்ற பிரச்சினையில் வாழ்ந்து வருபவர் பலர் உள்ளனர்.

உக்ரைன் போர் போன்று, உலகின் சில பகுதிகளில் இடம் பெறும் போர்கள், வன்முறைத் தாக்குதல்கள், வறட்சி, பஞ்சம், புயல், வெள்ளம், நில அதிர்வு போன்றவற்றால் கடுந்துயர்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு இந்தப் பிரச்சினை அதிகமாகவே உள்ளது. இத்தகைய பிரச்சினைகளால் பெண்களும், சிறாரும்தான் அதிகமாக இன்னலுக்கு உள்ளாகின்றனர். போர்களில்

எத்தனையோ இளம் தாய்மார் கணவர்களை இழந்து குடும்பப் பாரத்தைச் சுமந்து வருகின்றனர்.

கைம்பெண்களின் நிலை குறித்த விழிப்பு ணர்வை உருவாக்கி, அவர்களின் உரிமைகளை மீட்டெடுத்து, அவர்கள் மாண்புடன் வாழ வழியமைக்கும் நோக்கத்தில், ஐ.நா. நிறுவனம் 2010ம் ஆண்டில் உலக கைம்பெண்கள் நாளை உருவாக்கி, ஒவ்வோர் ஆண்டும் ஜுன் 23ம் தேதி அந்நாளைக் கடைப்பிடித்து வருகிறது. இன்று உலகில் ஏறத்தாழ 35 கோடி கைம்பெண்கள் உள்ளனர் என்று, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஜுன் 19 ஞாயிறு நண்பகலில் வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் கூடியிருந்த மக்களுக்கு ஆற்றிய மூவேளை செப உரைக்குப்பின், அம் மக்களிடம், போரினால் துன்புறும் மக்களுக்கு என்ன செய்கின்றீர்கள் என உங்களையே கேளுங் கள் என்று கூறினார். நாமும், அப்போர் உட்பட பல்வேறு காரணங்களால் துன்பங்களை எதிர் கொள்கின்ற மக்களுக்காக, குறிப்பாக கைம்பெண்க ளுக்காக என்ன செய்கிறோம் என மனப் பரிசோதனை செய்வோம்.

போராட்டமே வாழ்க்கை என்பது எல்லோருக் கும் தெரிந்ததே. மனிதர் உட்பட, உயிரினங்கள் அனைத்துமே, உயிர் வாழ்க்கைக்காகப் போராடு கின்றன. இந்தப் போராட்டத்தைப் பூந்தோட்டமாக்க, அதாவது மகிழ்ச்சியானதாக ஆக்குவது அவரவர் சாமார்த்தியத்தைப் பொருத்தது. துயர்கண்டு அதிலே துவண்டுவிடாமல் புதுவாழ்வைத் துவக்கும் எத்தனையோ கைம்பெண்கள் இருக்கின் றனர்.

கைம்பெண்களே, நீங்கள் கூண்டுக்குள் அடைபட்டுள்ள உயிரினம் அல்ல, மாறாக அதை உடைத்தெறிந்து வெளியே வந்து வீரநடைபோட வேண்டிய துணிச்சல் பெண்கள். கவிஞர் மேத்தா அவர்கள் எழுதியிருப்பதுபோல, “பிறைச்சந்திரனே, உனக்குள்தான் பூரண சந்திரன் புதைந்திருக்கிறது”. கவிஞர் வைரமுத்து அவர்கள், “காலுக்கு செருப்பு வந்தது எப்படி, முள்ளுக்கு நன்றி சொல்” என்று பதிவுசெய்திருக்கிறார். ஆதலால் இதை உணர்ந்து சொந்த வாழ்வையும், மற்றவர் வாழ்வையும் பூந்தோட்டமாக்குவோம்.

**நன்றி** – மேரி தெரேசா: வத்திக்கான்




அமெரிக்க ஐக்கிய நாட்டில், தேசிய அளவில் சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்த ஐம்பது ஆண்டுகால கருக்கலைப்பு உரிமையை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் ஜூன் மாதம் 24ம் திகதியன்று இரத்து செய்திருப்பது குறித்து திருப்பீட வாழ்வுக் கழகமும், அந்நாட்டு ஆயர்களும் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளனர்.

அந்நாட்டில் 1973ம் ஆண்டில், ரோ மற்றும் வேட் (Roe v Wade) இடையிலான வழக்கில், “கருக்கலைப்பு என்பது, பெண்ணின் தனிப்பட்ட உரிமை, அது அரசியலமைப்பு உரிமை” என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதேபோல, 1992ம் ஆண்டில் பென்சில்வேனியா மற்றும் கேசே (Southeastern Pennsylvania v. Casey) இடையிலான வழக்கில், “22 முதல் 24 வார கர்ப்பத்தை சம்பந்தப்பட்ட பெண் சட்டப்பூர்வமாக கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்” என்று தீர்ப்பளிக்கப்பட்டது.


இந்த நிலையில், உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பால், கருக்கலைப்பு வழியாக களங்கமற்றவர்களின் மனித வாழ்வைப் பறிப்பதற்கு சட்டரீதியாக அனுமதிப்பதற்கு 1973ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட சட்டம் இரத்து செய்யப்பட்டுள்ளது என்றுரைத்துள்ள திருப்பீட வாழ்வு கழகத்தின் தலைவர் பேராயர் Vincenzo Paglia அவர்கள், மனித வாழ்வை ஊக்குவிக்கும் சட்டங்களை இயற்றுமாறு அரசுகளை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேற்குலக சமுதாயம், வாழ்வு மீது பேரார்வத்தை இழந்துவரும்வேளை, இந்த தீர்ப்பு, முக்கியமான விவகாரமான மனிதரின் வருங்காலம் குறித்தும், வருங்காலத் தலைமுறைகள் மீது நமக்குள்ள பொறுப்பு குறித்தும் ஒன்றிணைந்து சிந்திப்பதற்கு அழைப்பு விடுக்கின்றது என்று, பேராயர் பாலியா அவர்கள் தெரிவித்துள்ளார்.

– வத்திக்கான்

# இறைவா!
## இன்னமும் பொறுப்பாயோ...?

அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்





உண்டிட உணவு உறங்கிட வீடு
ஒன்றுமே இல்லை ஏழைகட்கு
சண்டைகள் மோதல் தரித்திரக் கோலம்
தாங்கொணாத் துயரம் மக்களுக்கு

எண்ணெய் பருப்பு மரக்கறிகள் தினம்
ஏறும் நிலைதான் பொருளனைத்தும்
கண்ணைக் கசக்கி அழுவோரும் தினம்
கடும்பசியாலே தவிப்போரும்

மண்ணெண்ணெய் பெற்றோல் டீசலுக்காய்
மக்கள் தெருக்களில்தொடரும் நெடும் வரிசை
பெண்களும், ஆண்களும் முதியோரும்
பெருந்துயர், வெய்யில் மழை பனியில்

வெய்யிலினில் வதங்கித் துடிதுடித்து
வீழ்ந்துயிர் விட்டார் பல மாந்தர்
உய்யும் வழிபண்ணப் புரியாமல்
உறங்கிடும் நிலையில் ஆள்பவர்கள்...!

வீடுகள், வெளிகள், தொழிற் தளங்கள்
மின்சாரமற்று தொடர் இருட்டில்
காடுகள் போலே ஊர்மனைகள்
காலம் எப்போ ஒளி பிறக்க...?

தொடருது மக்களின் போராட்டம்
துப்பாக்கிச் சூட்டொடு அடிதடிகள் ....!
இடர் பல நிலைபெறப் போகிறதோ!
இறைவா இன்னமும் பொறுப்பாயோ....?

## மருத்துவக் குறிப்புகள் ...







**நெஞ்சு சளி**

தேங்காய் எண்ணையில் கற்பூரம் சேர்த்து நன்கு சுடவைத்து ஆர வைத்து நெஞ்சில் தடவ சளி குணமாகும்.

**தலைவலி**

ஐந்தாறு துளசி இலைகளும் ஒரு சிறு துண்டு சுக்கு. 2 லவங்கம். சேர்த்து நன்கு அரைத்து நெற்றியில் பற்றாகப் போட்டால் தலைவலி குணமாகும்.

**தொண்டை கரகரப்பு**

சுக்கு. பால் மிளகு. திப்பிலி. ஏலரிசி ஆகியவற்றை வறுத்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட தொண்டை கரகரப்பு குணமாகும்.

**தொடர் விக்கல்**

நெல்லிக்காய் இடித்து சாறு பிழிந்து. தேன் சேர்த்து சாப்பிட்டால் தொடர் விக்கல் தீரும்.

**அஜீரணம்**

ஒரு டம்ளர் தண்ணீரில் கருவேப்பிலை. இஞ்சி. சீரகம். மூன்றையும் கொதிக்க வைத்து ஆறவைத்து வடிகட்டி குடிக்க அஜீரணம் சரியாகும். அல்லது கறிவேப்பிலை. சுக்கு. சீரகம். ஓமம் சேர்த்து துவையல் அரைத்து சாப்பிட்டால் அஜீரணம் சரியாகும். அல்லது வெற்றிலை. 4 மிளகு இவற்றை மென்று தின்றால் அஜீரணக்கோளாறு சரியாகும்.



## வெளிநாட்டு கடன் பிரச்சனையால் நாடுகள் பாதிப்பு

உணவு மற்றும், எரிபொருள்களின் விலையேற்றத்தால் பொதுநலத்திற்கு ஒதுக்கப்படும் அரசுகளின் நிதி அதிகரிக் கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுவரும்வேளை வெளிநாட்டு கடன் பிரச்சினையால், 2019ம் ஆண்டைவிட 2023ம் ஆண்டில் குறைவாகச் செலவுகள் செய்யவேண்டிய நிலை நாடுகளுக்கு, உருவாகியுள்ளது என்று ஏழ்மை ஒழிப்பு அமைப்பு ஒன்று கூறியுள்ளது.

வருவாய் குறைந்த நாடுகளின் வெளிநாட்டு கடன் சுமையால், 2019க்கும், 2023க்கும் இடைப்பட்ட காலத் தில் அந்நாடுகள் பொதுநலனுக்குச் செலவழிக்கவேண்டிய தொகை 3 விழுக்காடு குறைந்துள்ளது என்று, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பு வெளியிட்ட அறிக்கை கூறுகிறது.

வெளிநாட்டுக்கடன் நீதி என்ற தலைப்பில் ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இவ்வமைப்பு, அடிப்படை நலவசதிகள் மற்றும், உள்கட்டமைப்புகளைச் சீரமைக்க, பொதுநலத்திற்குச் செலவிடவேண்டிய தொகை அதிகரிக்கப்படவேண்டியுள்ளது என்றும் கூறியுள்ளது.

■■■■ ● ● ■■■■ ● ● ■■■■

### குடும்ப வன்முறை பல கத்தோலிக்க குடும்பங்களைப் பாதிக்கின்றது

குடும்ப வன்முறை, இலட்சக்கணக்கான கத்தோலிக்க குடும்பங்களை, வாழ்வு முழுவதும் பாதித்து வருகின்ற வேளை, திருஅவை இந்த உண்மையை உணர்ந்து, நலமான குடும்பங்கள் அமைக்கப்படுவதற்கு உதவவேண்டும் என்று, ஜூன் 22ம் திகதி வத்திக்கானில் தொடங்கியுள்ள பத்தாவது உலக குடும்பங்கள் மாநாட்டு விழாவில் உரை யாற்றிய அமெரிக்க ஐக்கிய நாட்டின் உளவியல் மருத்துவர் Christauria Welland அவர்கள் கேட்டுக்கொண்டுள் ளார். அவர், உலக அளவில் ஏறக்குறைய முப்பது விழுக் காட்டுப் பெண்கள், குடும்ப வன்முறைக்குப் பலியாகி வருகின்றனர் என்ற ஒரு புள்ளிவிவரத்தை எடுத்துரைத்தார்.

இந்த புள்ளிவிவரத்தை அடிப்படையாக வைத்து, மாநாட்டு அவையில் தன் கருத்துக்களைப் பதிவுசெய்த Christauria Welland அவர்கள், ஏறத்தாழ 12 கோடியே 50 இலட்சம் கத்தோலிக்கப் பெண்கள், தங்கள் வாழ்நாளில் குறைந்தது ஒருமுறையாவது உடலளவில் அல்லது, பாலிய லில் வன்முறைக்கு உள்ளாகின்றனர் என்று குறிப்பிட்டார்.

# திருஅவைச் செய்திகள்

### ஆயர்கள்: இலங்கை தன் வரலாற்றில் பேராபத்தை நெருங்கி வருகிறது

இலங்கையில் நாளுக்குநாள் மிகவும் மோசம டைந்துவரும் பொருளாதார நெருக்கடியால் இடம் பெற்றுவரும் வன்முறை, உண்மையிலேயே நாட் டிற்கு பேராபத்தாக மாறி வருகிறது என்று, அந் நாட்டு கத்தோலிக்க ஆயர்கள் எச்சரிக்கை விடுத் துள்ளனர்.

இந்நிலையைத் தவிர்க்கவேண்டும் எனில், அரசின் கொள்கைகளில் உடனடி மாற்றம் இடம் பெற வேண்டும். மற்றும், அரசுத்தலைவரின் அதிகா ரங்களை வரையறுப்பதற்கு, அரசியலமைப்பு திருத் தியமைக்கப்பட வேண்டும் என்று ஆயர்கள் கூறி யுள்ளனர்.

சிறாரும் இளையோரும் மாண்புடன் வாழக் கூடிய ஒரு நாட்டைக் கொண்டிருப்பதற்கு, தற்போ தைய நெருக்கடி நிலைகள் அகற்றப்படுவதும், நீதி. சமத்துவம், மற்றும் திறந்தமனம் ஆகிய பண்புகள் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவதும் மிகவும் முக்கியம் என்று ஆயர்கள் அரசிடம் கூறியுள்ளனர்.

மக்கள் அடிப்படைத் தேவைகளின்றியும், நோயாளிகள் உயிர்காக்கும் மருந்துகள் கிடைக் காமலும், பெற்றோர், குழந்தைகளுக்கு பாலும் உணவும் கிடைக்காமலும் உள்ளனர் எனவும், ஆண்டு நிறையமர்வு கூட்டத்தின் இறுதியில் இலங்கை ஆயர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

நாட்டைத் தாக்கியுள்ள பெருந்துயர், மிக மோச மான ஒரு காலக்கட்டத்திற்கு இட்டுச் செல்கின்றது என்பதை உறுதிபடக் கூறலாம் என்றும், தற்போது பதவியில் இருக்கின்ற இடைக்கால அரசு, இத்த கைய பிரச்சினைகளைக் களையவும், அன்றாடத் துன்பங்களிலிருந்து மக்களை விடுவிக்கவும் வேண் டும் என்றும் இலங்கை ஆயர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.





**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :** திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்,142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி,
மட்டக்களப்பு. தொ.எண்: 0779780151, 0775019977

# வினாவிடைப் போட்டி இல. - 39

1) இயேசுவைப் பின்பற்ற விரும்பிய செல்வந்தரிடம் அவர் கூறியது என்ன?

..............................................................................................................................................

2) மத்தேயு 6:1-4 கூறும் வசனம் என்ன? ..............................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

3) மத்தேயு நற்செய்தியில் நோன்பிருப்பது பற்றி இயேசு எவ்வாறு தெளிவாக விளக்கியிருந் தார்? ..............................................................................................................................

..............................................................................................................................................

..............................................................................................................................................

4) தென்னமெரிக்காவில் இனவெறிக் கொள்கைக்கு எதிராகவும், உலகின் பல்வேறு சமுதாய பாகுபாடுகள் களையப்பட வேண்டும் என்றும் போராடிய அருள்பணியாளர் யார்?

..............................................................................................................................................

5) பிரபல்யமான "ஒலிவமலை" அமைந்துள்ள நாடு எது? ...........................................................

6) புனித பிரான்சிஸ்கு சவேரியாரை மனம்மாறத் தூண்டிய மத்தேயு நற்செய்தி வரிகள் எவை? ............................................................................................................................

..............................................................................................................................................

7) தண்ணீரின் தன்னிகரற்ற தன்மை பற்றி விரிவாக சொல்லப்படும் நூல் எது?

..............................................................................................................................................

8) புனித பவுலடியார் கிறிஸதுவின் உயிர்ப்பினைப் பற்றி 1 கொரிந்தியரில் கூறுவது என்ன?

..............................................................................................................................................

..............................................................................................................................................

9) உக்ரைனில் புலம்பெயர்ந்து வரும் மக்களுக்கு உதவிகள் புரியும் இந்திய அருட்சகோதரி யார்? ..............................................................................................................................

10) "பழிச் சொல்லையும், புகழ் மொழியையும் சமமான முறையில் ஏற்றுக்கொள்பவனே தியாகி யாக இருக்க முடியும்" எனக் கூறியவர்: ..........................................................................

பெயர் : ......................................................................

முகவரி : ......................................................................

......................................................................


பங்கு / தொ.பே.இல : ......................................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ......................................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 39**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 31.07.2022




31.07.2022

**சரியான விடைகளை 1 திருவெளிப்பாடு 1:20 ஆகிய பகுதியில் இருந்து தெரிந்து எழுதவும்**

1. லேவியின் புதல்வர்களின் பெயர்கள் என்ன? ...............................................................

...............................................................................................................

2. ஆண்டவர் மோசேயிடம் "நான் உன்னோடு பேசுவதையெல்லாம் எகிப்திய மன்னன் பார்வோனிடம் நீ எடுத்துக் கூறு" எனக் கூறியபோது மோசேயின் பதில் எவ்வாறிருந்தது? ...............................................................

...............................................................................................................

3. மோசேயின் சகோதரர் யார்? ...............................................................

4. எகிப்தியரின் 10 பெரும் துன்பங்கள் எவை? ...............................................................

...............................................................................................................

...............................................................................................................

5. கல்மழை, இடிமுழக்கத்தினால் அழிந்துபோன பயிர்கள் யாவை?

...............................................................................................................

6. ஆண்டவர் ஆட்டுக்கிடாயை வெட்டி எவ்வாறு உண்ணும்படி இஸ்ராயேல் மக்களுக்கு பணித்திருந்தார்? ...............................................................

...............................................................................................................

7. ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுக்கு ஏழு நாட்களுக்கு எதை உண்ணுமாறு பணித்திருந்தார்? ...............................................................

8. அன்னியராக அலைந்தபோது தங்கியிருந்த கானான் நாட்டினை யாருக்கு கொடுப்பதாக ஆண்டவர் வாக்களித்தார்?

...............................................................................................................

9. காரிருள் எத்தனை நாட்கள் இருந்தது? ...............................................................

10. அன்னியனொருவன் பாஸ்கா விழா கொண்டாட விரும்பினால் எவ்வாறான விதிமுறையினைப் பின்பற்ற வேண்டும் என ஆண்டவர் கூறினார்?

...............................................................................................................

...............................................................................................................

**பெயர் :** ...............................................

**முகவரி :** ...............................................

...............................................

...............................................

**பங்கு / தொ.பே.இல :** ...............................

**அனுப்ப வேண்டிய தபாலகம் :** .....................

...............................................

<u>அனுப்பவேண்டிய முகவரி :</u>

**திருவிவிலியம் கற்போம் - 217**
**'தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



# போட்டி முடிவுகள்!



**திருவிவிலியம் கற்போம் – 215 விடைகள்**

1. இயேசு கிறிஸ்து அருளிய வெளிப்பாட்டின் வாயிலாக
2. ஆபிரகாமுக்கு
3. ஈசாக்கு
4. அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம்
5. உடலில் உள்ள தழும்புகள்
6. கிறிஸ்து வழியாக உலகம் தோன்றுவதற்கு முன்பே
7. நற்செயல்கள் புரிவதற்கே
8. கடவுளின் தூய ஆவியார்
9. தம் தாய் தந்தையை
10. திக்கிக்கு

**பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**போட்டியில் சரியான விடைகளை எழுதி ரூபா 400/= பரிசு பெறுவோர்:**

* **இ. சு. பேரின்பராசா,**
  இல. 54/17, 7ம் குறுக்கு,
  இருதயபுரம் மேற்கு,
  மட்டக்களப்பு.

* **J. மெலனி,**
  135, லேடி மெனிங் டிறைவ்,
  மட்டக்களப்பு.

போட்டியில் பங்குபற்றியோர் – 10 பேர்
சரியான விடையளித்தோர் – 09 பேர்

* **டியனி வல்த்தசார்,**
  அம்புறோஸ் வீதி,
  கருவேப்பங்கேணி,
  மட்டக்களப்பு.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 167 முடிவுகள்**

**1ம் பரிசு - 400/=**

* **S. மிலேஷா,**
  சின்ன உப்போடை,
  மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**

* **ஹகானியா,**
  உடையார் வீதி,
  கல்முனை - 02.

**3ம் பரிசு - 200/=**

* **பி. யோனா,**
  சொறிக்கல்முனை.

பங்குபற்றியோர் – 18

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. **(ஆ - ர்)**



# நம்மிடமே திரும்பிவரும்....

அரசர் ஒருவர் யானை மீது அமர்ந்து நகர்வலம் சென்று கொண்டிருந்தார். அப்போது கடைத்தெருவில் ஒரு குறிப்பிட்ட கடை வந்தபோது அரசர் அருகிலிருந்த அமைச்சரிடம் ''அமைச்சரே, ஏனென்று எனக்குப் புரியவில்லை, இந்தக் கடைக்காரரைத் தூக்கிலிட்டுக் கொன்றுவிடவேண்டும் என்று தோன்றுகிறது'' என்றார். அரசர் கூறியதைக் கேட்ட அமைச்சர் அதிர்ந்து போனார். அரசரிடம் விளக்கம் கேட்பதற்குள் அவர் அக் கடையைக் கடந்துவிட்டார். அடுத்த நாள் அந்த அமைச்சர் மட்டும் தனியாக அந்தக் கடைக்கு வந்தார். அவர் அந்தக் கடைக்காரரிடம் யதார்த்தமாகக் கேட்பது போல, வியாபாரம் நன்றாக நடக்கிறதா என்று விசாரித்தார். அதற்கு கடைக்காரர், ''ஐயா, நான் சந்தனக் கட்டைகளை வியாபாரம் செய்கிறேன். என் கடைக்கு வாடிக்கையாளர் யாருமே வருவது கிடையாது, கடைக்கு நிறைய மக்கள் வருகின்றனர், சந்தனக் கட்டைகளை முகர்ந்து பார்க்கின்றனர், நல்ல மணம் வீசுவதாகப் பாராட்டக்கூடச் செய்கின்றனர், ஆனால் யாரும் வாங்குவதுதான் கிடையாது... அதனால்தான் ஐயா, இந்த நாட்டின் அரசர் சாகும் நாளை எதிர் நோக்கியுள்ளேன். அவர் இறந்து போனால் எப்படியும் எரிக்க நிறைய சந்தனக் கட்டைகள் தேவைப்படும். எனக்கும் நல்ல வியாபாரம் ஆகி, என் கஷ்டமும் தீரும்....'' என்று மிகுந்த கவலையோடு சொன்னார். கடைக்காரர் சொன்னதைக் கேட்ட அமைச்சர் அதிர்ந்து போனார். முதல் நாள் அரசர் கூறியதன் காரணம் என்னவென்று அமைச்சருக்கு விளங்கியது. இந்தக் கடைக்காரரின் கெட்ட எண்ணமே அரசரின் மனதில் எதிர்மறை அதிர்வுகளை அவரையும் அறியாமல் ஏற்படுத்தி அப்படிச் சொல்ல வைத்தது என்று உணர்ந்தார் அமைச்சர். மிகவும் நல்லவரான அந்த அமைச்சர், இந்த விடயத்தை சுமுகமாகத் தீர்க்க உறுதி பூண்டார். தான் யாரென்பதைக் காட்டிக் கொள்ளாமல் அவர் கடைக்காரரிடம் கொஞ்சம் சந்தனக் கட்டைகளை விலைக்கு வாங்கினார். அவற்றை அரசரிடம் எடுத்துச் சென்று, ''அரசே, நேற்று தாங்கள் கூறிய அந்த சந்தனமரக் கடைக்காரர், உங்களுக்கு இதைப் பரிசாக வழங்கினார்'' என்று கூறி, அவற்றை அரசரிடம் கொடுத்தார். அந்தத் தங்க நிறமுள்ள சந்தனக் கட்டைகளை எடுத்து முகர்ந்த அரசர் மிகவும் மகிழ்ந்தார். அந்தக் கடைக்காரரைக் கொலைசெய்யும் எண்ணம் தனக்கு ஏன் வந்தது என்று வெட்கப்பட்டார் அரசர். அந்தக் கடைக்காரருக்கு சில பொற்காசுகளைக் கொடுத்தனுப்பினார் அவர். அந்த பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட வியாபாரி அதிர்ந்து போனார். அந்தப் பொற்காசுகளால் அவரது வறுமை தீர்ந்தது. மேலும், அந்தக் கடைக்காரர், இத்தனை நல்ல அரசரை தன்னுடைய சுயநலத்துக்காக இறக்கவேண்டும் என்று எண்ணியதற்கு மனதுக்குள் மிகவும் வெட்கப்பட்டு வருந்தினார். அத்துடன் அந்த வியாபாரி மனம் திருந்தி நல்லவராகவும் மாறினார்.

நாம் மற்றவர் மீது நல்லெண்ணம் வைத்திருந்தால் அவை நல்லெண்ணமாக நம்மிடம் திரும்பி வரும். கெட்ட எண்ணம் வைத்திருந்தால் அதே வழியில் அது நம்மிடம் திரும்பிவரும். ■

**ஒவ்வொரு வீட்டைச் சுற்றியும் பத்துவகை மரங்கள் இருக்க வேண்டுமாம்....**

வீட்டுக்கு முன் வேப்பமரம்,
பக்கத்தில் ஒரு முருங்கைமரம்,
வெளியே பப்பாளிமரம் இருக்க வேண்டும்,
குளிக்கும் தண்ணீர் போகும் இடம்
வாழைமரம் இருக்க வேண்டும்,
பாத்திரங்கள் கழுவும் இடத்தில்
தென்னைமரம் இருக்க வேண்டும்,
ஒரு எலுமிச்சைமரம் அவசியம்,
அதன் நிழலின் கீழ் பகுதியில்
கறிவேப்பிலைச்செடி இருக்க வேண்டும்,
ஒரு நெல்லிச்செடி இருக்க வேண்டும்,
வேலியில் நான்கு இடத்தில்
சீதாமரம் இருக்க வேண்டும்,
ஒரு மாமரம் வைக்க வேண்டும்.
இப்படி இருந்தால் ஒருவர் கூட
பசியுடன் தூங்க மாட்டார்கள்.

–நம்மாழ்வார்–

நன்றி: இணையம்

## முதல்நன்மை உறுதிப்பூசுதல் வழங்கல்
- திருஇருதயநாதர் ஆலயம், இருதயபுரம் -



## புனித அந்தோனியார் சிற்றாலய திறப்புவிழா - தன்னாமுனை.







## திருப்பாலத்துவ சபையினரின் பாப்பரசர் தினக் கொண்டாட்டம்
- தூய மரியாள் பேராயம், புளியந்தீவு -





## எமது மறைமாவட்டத்தில் பொத்துவில் பங்கின் பானம பகுதியில் அமலமரித் தியாகிகள் சபையினரின் பணி குறித்த கலந்துரையாடல்



